பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

A/L 91
ஆரம்பமாகி விட்டது
இரசாயனவியல்
திரு. செல்வா
NIRU TUITION CENTRE
Kondavil.

# உதயன்

விலை
ரூ 2.50

O/L 89
புதிய, பழைய பாடத் திட்டங்களுக்கான
வகுப்புகள்
ஆரம்பமாகின்றன
NIRU TUITION CENTRE
Kondavil

சுடர் 4 விபவ ஆண்டு பங்குனி மீ 22 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 25 (04 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-102

### அரசு - எதிர்க்கட்சிகளின் புத்தாண்டு

# சமாதானத் திட்டம் பிசுபிசுக்கும் ஆபத்து!

## எனினும் கடைசி நேர முயற்சி ஓயவில்லை

கொழும்பு, ஏப்ரல் 4

**புத்தாண்டை முன்னிட்டு, நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக, அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கூட்டாக வேண்டுகோள் விடுக்கும் திட்டம் பிசுபிசுத்து விடுமா என்ற சந்தேக நிலை எழுந்துள்ளது.**

வன்செயல்களைக் கைவிடுமாறு எதிர்க்கட்சிகள் தனித்தே அறிக்கை விடவேண்டும் என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன பிகு செய்து வருகிறார்.

அதன் விளைவாக ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் சமாதான வேண்டுகோளில் ஒப்பமிடத் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

எனினும் சமாதான வேண்டுகோளை வெளியிடுவதற்கான கடைசி நேர சமரச முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அரசுடன் சேர்ந்து சமாதான வேண்டுகோளை விடுக்க மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன மறுத்துவிட்டார்.

அதனால்ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் புத்தாண்டுச் சமாதானத் திட்டத்தில் கையொப்பமிடத்தயக்கம்காட்டுகின்றனர்.

அதனால் புத்தாண்டுச் சமாதானத் திட்டம் சம்பந்தமான வேண்டுகோளை அரசும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து விடுப்பது தாமதமாகிறது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை கூட்டுவேண்டுகோள்அறிக்கை தயாரிக்கப்பட்டது தெரிந்ததே. அந்த இரண்டு பக்க அறிக்கையின் தலைப்பு வாசகம் 'அமைதி திரும்ப ஒரு வேண்டுகோள்' என்றிருந்தது.

இதைத் தயாரித்த கமிட்

[8ஆம் பக்கம் பார்க்க]

## வங்கிகள் இன்று இயங்கும்; ஆனால்பணப்புழக்கம் இல்லை

### செயலகமும் செயற்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

யாழ் மாவட்டத்தில் வங்கிக் கிளைகள், செயலகம், அதனுடன் தொடர்புபட்ட அலுவலகங்கள் ஆகியவை இன்று மீண்டும் இயங்கும்.

ஆனால் வங்கிகளில் பணப் புழக்கம் இடம்பெற மாட்டாது எனத்தெரியவருகிறது.

வங்கிக் கிளைகளுக்குரிய பாதுகாப்பு வசதிகள் மறுக்கப் பட்டிருப்பதால் வங்கிகளில் இன்று பணம் கொடுக்கல் வாங்கல் அனேகமாக மேற்கொள்ளப்படமாட்டாது என வங்கி வட்டாரங்கள் தெரிவித்

[8ஆம் பக்கம் பார்க்க]

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி 788.5

கொழும்பு, ஏப் 4

மார்ச்மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 788.5 ஆகும்.

குடிசன புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது. (ஒ-எ)

## உசனில் தேடுதல்

யாழ்ப்பாணம். ஏப்ரல் 4

மிருசுவில், உசன் பகுதிகளில் நேற்று அமைதிப் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை மிருசுவில் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தையடுத்தே சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது. (உ-10)

## ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வையில் நடந்த மோதல்

வல்வெட்டித்துறை ஏப்ரல் 4

வல்வெட்டித்துறை, நெடிய காடு சிறுவர் பூங்காவுக்குச் சமீபமாக, கடந்த ஞாயிற்றுக் கிழமை, இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

இந்திய அமைதிப்படையினர், உடுப்பிட்டி ஊடாகப் பொலிகண்டி முகாம் நோக்கி சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இரவு 6. 45 மணியளவில் மோதல் இடம்பெற்றதாக அறியவந்தது.

இந்த மோதல் சுமார் 45 நிமிட நேரம் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டது. ஆட்சேதங்கள் குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் தெரியவரவில்லை.

எனினும், இராணுவத் தரப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவைத் தாக்கியவருக்கு கருணை காட்டச் சிபாரிசு

கொழும்பு, ஏப் 4

பிரதமர் ராஜீவ் காந்தியை ரைபிள் பின்புறத்தால் தாக்கியதற்காக 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் இலங்கை கடற்படை வீரர் விஜயமுனி விஜிதா ரோஹணவுக்கு கருணை காட்டுவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கருணை காட்டுவது பற்றி ஆராயும்படி ஜனாதிபதிக்கு தான் சிபாரிசு செய்யவிருப்பதாக நீதி அமைச்சர் திரு. வின்சன்ட் பேரேரா கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

1987 ஜூலையில், இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட மறுநாள் பிரியாவிடை அணிவகுப்பொன்றை பார்வையிட்டுக் கொண்டு இருந்த சமயம் பிரதமர் ராஜீவ் கடற்படை வீரர் ரோஹணவால் தாக்கப்பட்டது தெரிந்தது.

கடந்த சனிக்கிழமை சுதந்திரக்கட்சி எம்.பி ஸ்டான்லி திலகரத்ன ரோஹண பற்றி பிரஸ்தாபித்தார். அவருக்கு பதிலளிக்கும் போதே நீதியமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார். (உ-எ)

### முச்சந்தி முரளி



உவர் ரஞ்சனுக்கும் உவற்றை ஆக்களுக்கும் இப்ப இப்பதான் உந்தக் காரண காரியங்கள் எல்லாம் புரியுது எண்டு சொல்லுங்கோ......!

## முன்னைய அரசுகளின் தவறே இனப்பிரச்சினைக்குக் காரணம்

### நாடாளுமன்றத்தில் ரஞ்சன்

கொழும்பு, ஏப். 4

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பொறுப்பான தன்மையில் நடந்து கொண்டிருந்தால் இனப்பிரச்சினையையே எழுந்திருக்காது.

— இப்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சொன்னார்.

நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்திற்குப் பதிலளித்து அவர் பேசினார்.

அங்கு அவர் மேலும்சொன்னதாவது;

அணிசேராக் கொள்கையை இலங்கை முழுமையாகக் கடைப்பிடித்து வருகிறது.

அரசு புதிதாக இந்திய — இலங்கை நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள உத்தேசித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடையே உறவுகளை வளர்க்க புதிய நட்புறவு உடன்படிக்கை உதவும். இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்படும் முன்னர் அது சம்பந்தமான யோசனைகளை அரசு வரவேற்கும் – என்றார். [உ-எ]

## ஹர்த்தாலுக்கு முன்னோடியாக ஜே. வி. பியினர் வீதித் தடைகள்!

கொழும்பு, ஏப்ரல் 4

நாளை 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை தென் பகுதியில் ஹர்த்தால் மேற்கொள்வதற்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜே. வி. பி. இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

வாகனப் போக்குவரத்துகளைத் தடை செய்யும்முகமாக மரங்கள் வீதிக்குக் குறுக்கே வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மின்சார, மற்றும் தந்திக் கம்பங்களும் வீதிக்குக் குறுக்காக போடப்பட்டுள்ளனவாம்.

இதனால் குருநாகல், காலி, மாத்தளை, கண்டி ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதே வேளையில் எச்சரிக்கை சுவரொட்டிகள் மூலமும், அனுமதேய தொலைபேசி மூல

[8ஆம் பக்கம் பார்க்க]

### ஆசிரியர்கள்

## இடமாற்றக் கடிதங்களை நாளை பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப், 4

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 361 ஆசிரியர்களின் இடமாற்றக் கடிதங்கள் நாளை புதன்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படும்.

நாளைக் காலையில் இருந்து அலுவலக நேரத்தில் உரியவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவுக்கு அப்பாலான

## வெளியூர் பஸ்சேவை நாளைமுதல் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

வடபிராந்திய போக்குவரத்துச் சபை நாளை முதல் தனது வெளியூர் சேவைகளை நிறுத்திக் கொள்ள உள்ளது.

அதன் பிரகாரம் வவுனியாவிற்கு அப்பாலான சேவைகள் மறு அறிவித்தல்வரை நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பியினர் ஒருவார காலத்துக்கு ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுகோள் விடுத்துள்ளதை அடுத்தே பஸ் சேவைகள் நிறுத்தப்படுகின்றன. (ஓ-9-10)

## திருமலை, மட்டக்களப்பில் 4 சிங்களவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஏப். 4

மட்டக்களப்பில் ஹோட்டல் ஊழியரான சிங்களவர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலையிலும் 3 சிங்களவர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் அரசுச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் சிங்களவர்கள் கொல்லப்பட்டதால் தமிழர் தாக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்திருப்பதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

## ஸ்ரீலங்கா சிப்பாய் இருவரும் கிழக்கில் சுட்டுக் கொலை!

கடந்த 24 மணி நேரத்தில் தென்பகுதியில் தீவிரவாத சந்தேக நபர்களினால் 12 பேர் கொல்லப்பட்டனர் என்று அரசுச் செய்தி ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவ முகாம் அருகே இரண்டு சிங்கள இராணுவச் சிப்பாய்களை ஜே. வி. பியினர் சுட்டுக்கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலன்னறுவ, அனுராத

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் கல்கத்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

இந்திய அமைதிப் படையின் தளபதி லெப்டினன் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் செய்தார்,

அவர் மாவட்டத்திலுள்ள

[8ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவுப் பகுதியில் வாந்திபேதிநோய் பரவுகிறது

### நோயாளர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப் 4

முல்லைத்தீவுப் பகுதியில் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்ட சிலர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவுப் பகுதியில் மேலும் பலர் இந்நோயினால் பிடிக்கப்பட்டிருப்பதாகவும், கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதியின்மை காரணமாக அவர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இராணுவ நடவடிக்கைகளி

[8ஆம் பக்கம் பார்க்க]

## இணைப்புக்குத் தேர்தல்; கண்காணிக்க அணிசேரா நாடுகளின் அமைதிப்படை

### அரசு ஆலோசிப்பதாக அமைச்சர் தகவல்

இணைப்புக் குறித்து கிழக்கு மாகாணத்தில் வருகிற ஜூலை 5 இல் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்பைக் கண்காணிக்க அணிசேரா நாடுகளிலிருந்து அமைதிப் படை ஒன்றை வரவழைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

இத்தகவலை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். [illegible] சுதந்திரக் கட்சி எம். பி லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் அணிசேரா நாடுகளில் இருந்து அமைதிப்படையை வரவழைத்து, சர்வசன வாக்கெடுப்பைக் கண்காணிக்க அனுமதிக்க வேண்டும் என்ற யோசனையை வெளியிட்டார்.

அப்போதே அந்த யோசனையை அரசு பரிசீலனை செய்யும் என்று அமைச்சர் சொன்னார். (உ-எ)

### சுபநேரம்

04 – 04 - 1989

பங்குனி – 22

சுபநேரம்:
10 – 40 முதல் 12 - 10 வரை

ராகுகாலம்:
03 – 10 முதல் 04 – 40 வரை

## இராமநாதன் தலைமைநீதியரசர்

நீதியரசர் திரு. பி. இராமநாதன் அப்பீல் நீதிமன்ற தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

அவர் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

கலர் படப் பிரதி ஒன்று

ரூபா 4-75

விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்

நவீன கம்பியூட்டர் மூலம்
பிரதி செய்ய நாடுங்கள்!

ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த அலுமாரி, கட்டில் ஒவ்விஸ் மேசை, சோக்கேஸ், T. V. D. பிறிச், சிங்கர்மெசின் Voltage Regulator, கண்ணாடி மேசைகள், மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 'Supera' 343, பருத்தித்துறைறோட், அரசடிச்சந்தி, நல்லூர். (10260)

நல்ல இன வளர்ப்பு மீன்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. குறிப்பாக R. Gold Fish, R. Commet, S/ Tail. இரத்தினவாசா, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, (பழைய புகையிரத வீதி] (10269)

National Video Deck, Portable NV 180, புதியதும், பாவித்ததும் விற்பனைக்கு உண்டு. மற்றும் National NV- 100, 1000 Watts வீடியோ லைற், சகலவிதமான Video-Heads, KV. 20 0, Sony TV Silver 100 W 2 in 1 ஆகியனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: எவர் விஷன், 21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [C/2121]

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட அதி நவீன டிசைன்களில் மணமகளின் தலைச்சோடனை நகைகள், வாடகைக்கும் விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; கனகசபை தர்மகுலசிங்கம், கணேஸ்வாசா, வாரிவளவு, காரைநகர். C/o சித்தி நகைமாளிகை, 213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10746]

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Cobb) புறொயிலர் குஞ்சு [Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல்குஞ்சு 5ஆம்திகதி புதன்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில் [10244)

### எவர் சில்வர்

கண்ணைக்கவரும் எவர்சில்வர் பாத்திரங்களுக்கு நாடுங்கள் "Rajz Brand" தரமானவை. நீடித்து உழைப்பவை. இருநூற்றுக்கும் மேற்பட்ட பலவகை டிசைன்களில் பல்வேறு நிலையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரே உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. Rajz Brand எவர்சில்வர் தயாரிப்புக்கள் யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான 3043, தகடுகளால் செய்யப்படுகின்றன. காட்சி அறை, S. A. Thevathasan, சூராவத்தை, சுன்னாகம். (சி/1890)

### தேவை

1½ - 2 மாத ஆண் - பெண் பொமரேனியன் நாய்க்குட்டி தேவை. வயது, நிறம் விலை விபரம் குறித்து எழுதவும். 476, C/o உதயன், யாழ்ப்பாணம். (58)

எமது நிறுவனத்தில் கடமை புரிவதற்கு ஒரு ஓய்வுபெற்ற வைத்தியர் (M.B.B.S. (Cey.) அல்லது ஓய்வுபெற்ற R.M.P. உடன் தேவை. புதன்கிழமை 5. 4. 89 க்கு முன் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்: சிற்றி மெடிக்கல்கொம்பிளக்ஸ் பிரதான வீதி, மானிப்பாய். (10462)

பாவித்த பாவிக்கமுடியாத விசுடைசர்கள், Jarசன் மோட்டார்கள் மின்விசிறிகள், ஸ்ராட்டர்கள், Fridges, மின் உபகரணங்கள் தேவை. Omega, Manipay Road, Jaffna. (10456

தட்டச்சு இயந்திர ஸ்தாபனத்துக்கு தட்டச்சு இயந்திரங்கள் திருத்திப் பழக விரும்பும் 17 வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில். தொடர்பு: Fudo Enterp ises, 39/17, Power House Road, 3rd Lane, Jaffna [சாமி அன் கோ. அருகாமையில்) [52]

### குருக்கள் தேவை

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவிலுக்கு ஒரு குருக்களும், நிவேதனங்கள் செய்யக் கூடிய உதவி ஐயாவும் தேவை. 10-4-89ஆம் திகதிக்கு முன்பாக, விரும்பியோர் தலைவர் இ. சிதம்பரநாதன் அவர்களை நேரடியாகவோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். சி. சுப்பிரமணியம், காரியதரிசி. (55)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574

### இடமாற்றம்

K. K. S வீதியில் அமைந்திருந்த சிறிலங்கா சலவைத் தொழிலகம் தற்போது சுன்னாகம் வாழைக்குலைச் சந்தை முன்பாக இடமாற்றம் அடைந்துள்ளதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். நடராசா. (10724)

### கழிவு இரும்பு

பழைய கழிவு இரும்பு மொத்தமாக வாங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரடியாக தொடர்புகொள்ளவும். தவம் ஸ்ரோர்ஸ், 40, ஈச்சமோட்டை வீதி யாழ்ப்பாணம். [10231]

### CLASSES

Technical Of icers Departmental Promotion Exam'nalion CLASSES Registration Accepted Contact CIVIL ENGINEERING TECHNOLOGICAL SERVICES "Anita" 53, A V. Road, Jaffna (10262]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### OMEGA

சகல குளிர்சாதனப் பெட்டிகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மோட்டருக்கும் ஒருவருட உத்தரவாதம் கொடுக்கிறோம். Gs நிரப்ப ரூபா 700/- மாத்திரம். ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (10457)

### WANTED

Wanted Bridegroom for a 30 years old Educated hand some girl substantial amount of dowry for the Proper person. Apply with a recent Photo to 474, C/o Uthayan. Jaffna. [56]

Hindu Vellala 33 years old bride seeks a partner, Govt Employee Preferred Apply with recent Photograph. 475, C/o Uthayan, Jaffna. (57)

### ACCOUNTS CLERK

Part qualified with at least 2 years Experience or EX-Inland Revenue Officer living within city limits· N. Karunai Ananthan & Co, C/o Taxman 55 1/2 Kannathiddy Jaffna. (C1596)

### P. V. C குழாய்கள்

P.V.C குழாய்கள், பொருத்திகள், Inches and Millimeters எல்லா அளவுகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (Water Pipes and Conduit Pipes அத்துடன் Golden Brand) Polishing Cloth. கிடைக்குமிடம் S.A தேவதாசன் சூராவத்தை, சுன்னாகம் (C/1910)

### வியாபார இடவசதி

யாழ். பஸ்ராண்டை அண்மித்த பகுதியில் கடைகள் உண்டு. தொடர்பு கொள்ளவும்: 478, மே/பா உதயன், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/2129)

### காணவில்லை

ராஜகுமார் தங்கராசா வயது 12. உயரம் 4' கறுப்புக் காற்சட்டையும் நீலக்கோடன் சேர்ட்டும் கடைசியாக அணிந்திருந்தார். இவரைக் கண்டு பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். மு. தங்கராசா, சலங்கண்டி தோட்டம், டிக்கோயா. க. திருச்செந்தில்நாதசர்மா, ஸ்டேஷன் றோட், தெல்லிப்பழை. [10268)

### தவறிவிட்டது

710630608 V இலக்கம் கொண்ட சோ. அருள்ஈசன் என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10258)

**AL/91**

A BOON TO STUDENTS

THE EXPRESS INSTITUTE KOPAY

**தூய/ பிரயோக கணிதம்**

Thu. 3.00 p.m
Sat - 6.30 - a.m

By
திரு. வெக்டர்

[C/2110]

# அடகு நகைகளை மீட்கும் கால எல்லை 2மாதங்களால் நீடிப்பு

கொழும்பு, ஏப் 4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்டுஎடுக்கும் கால எல்லையை மேலும் 2 மாதங்களுக்கு நீடிக்க பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட அந்த நகைகளை உரியவர்கள் மீட்டு எடுக்க 31-3-1989 வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் இதுசம்பந்தமாக பிரதமருக்கு அனுப்பிய முறைப்பாட்டில், திகதியை நீடிக்கும்படி கேட்டிருந்தார்.

அடகு வைக்கப்பட்ட நகைகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் மீட்பதற்கான பணத்தைச் செலுத்த இயலாதிருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களே. இவர்களில் பலர் மீனவர்களும் விவசாயிகளுமாவர்.

தற்போதய சூழ்நிலைகளின் கீழ் அன்றாட ஜீவனத்துக்கே பெரும்பாடுபடவேண்டியவர்களாக இருக்கின்றனர். எனவே நகைகளை மீட்க மேலும் 3 மாதகால அவகாசம் வழங்குங்கள்"—இப்படி ஜனாப் அஷ்ரப் கடிதத்தில் கேட்டிருந்தார்.

இதற்கு அனுப்பிய பதிலில்தான் 2 மாதகால அவகாசம் வழங்கப்படுவதாக பிரதமர் கூறியிருக்கிறார். (ஓ-எ)

வடக்கு - கிழக்கு அரச ஊழியர்

# வேலைக்குச் செல்லாதிருப்பது மத்திய அரசுக்கு சாதகமாகும்

## ஈ. என். டி. எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

வடக்கு-கிழக்கு அரச ஊழியர்கள் கடமைக்கு ஒழுங்காகச் செல்லாமல் இருப்பது மத்திய அரசுக்குச் சாதகமாக அமைகிறது என்று ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்.) தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப முன்னணி இது சம்பந்தமாக 2-4-89 தேதியிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச ஊழியர்கள் பயந்து கடமைக்குச் செல்லாமல் இருப்பதால் பாதிப்புக்குள்ளாவது தமிழ்மக்களே.

கடந்தகால அழிவுகளை நிவிர்த்தி செய்யும் வகையில் இந்தியா உட்படப் பலநாடுகள், முன்வந்து மக்களுக்குப் பயனுள்ள நிவாரணங்களை அளித்து வருகின்றன.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அழிவுகளைச் சீர்செய்து இழந்தவற்றை மீட்டு மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளும் இவ்வேளையில், அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமல் விட்டால், பாதிப்புக்குள்ளாவது எமது சமூகமே.

வெளிநாடுகளில் இருந்து வடகிழக்கு மாகாணத்திற்கு வரும் நிதியை எமக்கு அளிப்பதற்கு மத்திய அரசு தயக்கம் காட்டுவது வேதனைக்குரியவிடயமே. வடகிழக்குஅரசஊழியர்களின் நடவடிக்கையும் மத்திய அரசுக்குச் சாதகமாகவே அமைகிறது.

வீழ்ந்து கிடக்கும் எமது சமூகத்தை நிமிர்த்த நாம் எடுக்கும் முயற்சிகளை பயந்து முட்டுக்கட்டை போடுவது. எமது சமூகத்திற்குச் செய்யும் துரோகமாகும்.

ஆகவே அர்த்தமற்ற பயமுறுத்தல்களுக்கு அடிபணியாது பொதுமக்களின் நன்மையை முதன்மைப்படுத்தி எம்மக்களுக்குச் சேவைசெய்ய முன்வர வேண்டுமென்று வேண்டுகோள் விடுகின்றோம் என்று உள்ளது. (அ

## ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி







**ச. அருளம்பலம் (துரை)**
படைப்பு: 17-06-1945
அழிப்பு: 16-12-1987

**வே. சரவணமுத்து**
(இளைப்பாறிய அதிபர்)
தோற்றம்: 02-10-1914
மறைவு: 15-03-1988

**ச. நமசிவாயம் (சாமி)**
(ஆசிரியர்)
படைப்பு: 13-10-1948
அழிப்பு: 16-12-1987

**திதி: 04-04-1989**

தங்கையரின் மணங்கண்டே
தாலி கையிலெடுப்பதென்ற
சபதத்தை உரைத்து வயல்
சார்ந்து நிதம் உழைத்தவனே
மங்களங்கள் மலர்வித்து
வளர்ந்த தங்கள் குடிதன்னை
மணங்கமழ்ந்த காரகிலே
வாய்த்த உடன் பிறப்புகளின்
அங்கமெலாம் உருகவைத்த
அருந்தியாகச் சுடர்விளக்கே
அன்னை தந்தை இறைதொழுத
அப்பேற்றன் பசல் பேறே
இங்கெனது பணி பூர்த்தி
இனி மோட்சம்
திளைத்திடுவேன்
என்றே நீ சென்றிட்டாய்
எம் அருளம் பலச் சுடரே!

ஆறுமுகன் மார்க்காக
ஆறுபடை வீடுகளும்
ஆற்றுப்படுத்து முருகு
ஆற்றுப்படை ஓதி
சோறூட்டுந் தாயான
தூய கல்வி உலகிலொரு
சுடர்மிக்க அதிபனும் நீ!
வீறுற்ற சேரருவார்
விசவத்தை முருகன்
விடொற்றை நாளினிலே
மேவி வே துரைசாமி
நீறிட்ட நெஞ்சாற
நீர் சென்றீர் பின்னாலே!
நெருப்பாகி நெஞ்செல்லாம்
நிற்கின்றோம் நாமப்பா!

தாய்மாமன் மனம்வாழ
தாய் மாமன் சால்புமகள்
தக ஞான சேதிக்குத்
தந்தவனே பொற்றுவி!
செய்மைந்தன் றமணன்தன்
செல்லத்தால் சிலிர்த்தவனே
செந்தமிழ் ஆசிரியத்
திருச்சேவை பூண்டவனே
காய்பத்துச் சேர்ந்த குலை
காற்றில் அடிபட்டுக்
காய்கள் இரண்டு சிந்திக்
கணத்தில் பிரிந்ததுவாய்
போய்விட்டாய்
சின்னண்ணன்
புனிதஅடிப் பின்சென்றாய்
பொன்னுலகம்!
அந்தோநாம்
பொய்யுலகப் புழுவானோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்,
திருமதி பா. சரவணமுத்து, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பண்ணாகம், சுழிபுரம்
[68]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி ருக்மணி செல்லையா**
(உரிமையாளர், அசோகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 51&53 மத்திய வீதி, திருகோணமலை.)

அன்னையின் கையில்:- 10. 11. 1936
ஆண்டவன் கையில்.- 04.04. 1988

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையிலே
உனை இழந்தோம் - மனம் துடித்தோம்
அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்து விட்டு
அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரே!
ஆண்டொன்று உருண்டோடி போய்விட்ட போதினிலும்
அன்பெனும் அமுதினிலே நீராட்டி அறிவூட்டி
கொவ்வை இதழ்களால் கொட்டும் தேன்மொழியை
இனி எப்போ கேட்டிடுவோம் நாமெல்லாம்
ஆண்டுகள் உருண்டோடி மறைந்தாலும் தாயே
நீர் எமக்கு ஆறுதல் சொல்ல வந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்திக்காக எந்நாளும் பிரார்த்திக்கும்

அன்புக் கணவன்: வ. செல்லையா,
பிள்ளைகள்:
செ.சிவலோகநாதன் (அன்ரன், France),
செ. சிவலோகநாயகி (பவா),
செ. திருலோகநாயகி. செ. அருள்வதி,
மருமகள்: சி. ராதிகா (France),
தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

"அசோக் வாசம்"
ஏழாலை மத்தி,
ஏழாலை. (10270)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலுப்பிள்ளை கதிரித்தம்பி**
(முன்னாள் வின்ஸர் தியேட்டர் முகாமையாளர்)

மலர்வு: 27-08-1903
உதிர்வு: 04-04-1987

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், அன்பின் பிறப்பிடமாய், எமக்காக வாழ்ந்த அன்புத் தெய்வமே! எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட குடும்பவிளக்கே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

33, கைலாசபிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர். (சி/2066)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு பிரிவதை முஸ்லிம்களும் விரும்பவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் உரை

வண்ணார்பண்ணை, ஏப். 4

தமிழர்கள் பேரினவாதக் கட்சியின் வீட்டில் குடியிருக்க விருப்பவில்லை. இது போல் முஸ்லிம்களும் விரும்பவில்லை. எனவே தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற எங்களது சொந்த வீட்டில் குடியிருக்க விரும்பினோம். நாம் அண்டை வீட்டில் உள்ள தமிழ் மக்களுடன் அன்பு கொண்டு உறவாடவே விரும்புகின்றோம். எனவே தான் முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு-கிழக்கு இணைப்பை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றது. இணைப்புக் குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கிறது.

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்குரார்ப்பண கூட்டம் ஒன்றில் அதன் கொள்கை பரப்புச் செயலாளரான ஜனுப்மருதார்கணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லீம்களுக்கு தமிழ் மக்களால் கொடுக்கப்படும் உத்தரவாதம் தான் என்ன? முஸ்லிம்களின் நிலை என்ன?

இவற்றை தமிழ் பேசும் மக்களும், தமிழர் அமைப்புகளும் தெளிவுபடுத்த வேண்டும் என்றார். (இ-ரி)

## ஆர்ப்பாட்டமும் கண்டனமும்

அம்பாறை, ஏப். 04

சல்மான் ருஸ்டியின் "சாத்தானின் கவிதைகள்" நூலுக்கு கண்டனம் தெரிவித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன், ஊர்வலங்களும் நடத்தினர்.

வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின் பின்னர், மாவட்டத்திலுள்ள சகல ஜும்மா பள்ளி வாசல்களிலும் முஸ்லிம்கள் இந்த நூல்களைக்கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை முதலான பகுதிகளிலுள்ள ஜும்மா பள்ளிவாசல்களில் இக்கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. (க-14)

## பட்டதாரி ஆசிரியர் சம்பளம்: அரசின் கொள்கை அநீதியானது

### தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

சேவையிலிருந்து கொண்டே பட்டதாரிப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்குவதில் அரசு கடைப்பிடிக்கும் கொள்கை அநீதியானதும் கண்டிக்கப்பட வேண்டியதும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் சங்கக்கிளையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனை எடுத்துக் கூறினார்.

பட்டம் பெற்ற திகதியில் இருந்து அவர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்குமாறு தமது சங்கம் கல்வி அமைச்சை வற்புறுத்திக் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தமது உரையில் கூறினார்.

இதேபோன்று சேவையில் இருந்து கொண்டே இராமநாதன் நுண்கலைக் கல்லூரி சங்கீத நடன டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தகடிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் பட்டம் பெற்ற திகதியிலிருந்து உரிய சம்பளத்தை வழங்குமாறு தமது சங்கம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்ட இறுதியில் நடப்பு வருட கிளைத் தலைவராக திரு. எஸ். ஸ்ரீதர், செயலாளராக திரு. ஆர். மதியழகன், பொருளாளராக திரு. எஸ். சச்சிதானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட உபதலைவர் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம், நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிஆகியோரும் கலந்து கொண்டுஉரையாற்றினர். (க)

## குழுக்களுக்கு பயிற்சி

தாளையடி, ஏப். 4

வடமராட்சி கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட் 38 ஜனசக்திகுழுக்களுக்கு கிராமம் கிராமமாக பயிற்சி வகுப்புக்கள் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

வடமாரட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கே. ஈசிர்பாதம் உட்பட பலர் இப்பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றார்கள்.

(க - 144)

## கட்டடம் எரிப்பு

பொல்காவலையில் உள்ள உதவி அரச அதிபர் அலுவலக கட்டடம் எரிக்கப்பட்டது.

கட்டடத்தினுள் நுழைந்த பதினைந்து பேர் கொண்ட கோஷ்டி ஒன்று காவலாளியைத் துரத்தி விட்டு கதிரைகள், மேசைகள், மற்றும் தளபாடங்களை எல்லாம் ஒன்றுகப் போட்டு பெற்றோலை ஊற்றி எரித்தது என்று சொல்லப்பட்டது. (இ-எ)

A/L 91

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

அளவையியல்

திரு. விக்கி

புவியியல்

திரு. வேலா

அரசியல்

திரு. மஃறூப்

தமிழ்

திரு. திருஞானம்

(C/2109)

# வடக்கும் - கிழக்கும் மீண்டும் பிரிக்கப்படக் கூடாது

## பிரிந்தால் இரத்தக் களரி என்கிறார் நவசமசமாஜக்கட்சி செயலாளர்

கொழும்பு, ஏப். 04

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் படி தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கும் கிழக்கும் மீண்டும் எந்தக் காலத்திலும் பிரிக்கப்படக் கூடாது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் உயிர்த் தியாகத்தினால் உருவான இந்த மாகாணசபை பிரிக்கப்படுமானால் பெரும் இரத்தக்களரி ஏற்படுவது நிச்சயம்.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. விக்கிரமபாகு கருணாரட்ண இப்படிக் கருத்துத் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் கருத்தரங்கு ஒன்றில் திரு. கருணாரட்ண மேலும் கூறியதாவது:-

வடக்கும் - கிழக்கும் பிரிக்கப்படுவதையும், அதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதையும் நாம் முற்றாக எதிர்க்க வேண்டும்.

வடக்கும் - கிழக்கும் மீண்டும் பிரிக்கப்படுவதால் தற்பொழுது ஜனநாயக வழிக்கு திரும்பியுள்ள சில தீவிரவாத இயக்கங்கள் கூட மீண்டும் ஆயுத வழிக்கு செல்ல நேரிடும்.

இவ்வாறு நடந்தால் இந்த நாட்டில் முடிவில்லாத இரத்தக் களரி ஏற்பட இது வழிகோலும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் பிரிவினையற்ற ஒற்றையாட்சி அமைப்பினுள்ளான அதிகாரப் பரவலாக்கல் அடங்கியுள்ளது.

இதனால் நாம் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கிறோம். ஆனால் அதில் உள்ள சகல ஷரத்துக்களையும் நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எமக்கு உடன்படாத பல விடயங்களும் அதில் உண்டு.

உதாரணமாக வெளிநாட்டுப் படைகள் நமது நாட்டில் நிலை கொண்டிருப்பதை நாம் அனுமதிக்க முடியாது.

அரசு உடனடியாகமாகாண சபைக்கான அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டும் பொழுது சட்டத்தரணிடும். தாமதமானாலோ அல்லது வடக்கு கிழக்கு மாகாண சபையை பிரிக்க முற்பட்டாலோ இங்கு முடிவில்லா யுத்தம் ஒன்று ஏற்பட அரசே வழிகோலியதாக முடியும்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரியப்பிரதேசம். இதனை அரசு ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

இதனை ஜே. வி. பியினரோ அல்லது அரசினரோ அல்லது இருவரும் இணைந்தோ எதிர்த்தாலும் இடது சாரியினரான நாம் ஆதரவாகவே இருப்போம்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ 9)

## அரசு அலுவலக பொதுமக்கள் நாள்

கொழும்பு, ஏப். 4

அரசு அலுவலகங்களில் ஒவ்வொரு புதன்கிழமையும் பொதுமக்கள் நாளாக அனுஷ்டிக்கப்படும்.

அன்றைய தினம் பொது மக்கள் கொண்டுவரும் புகார்களை ஏற்கவும் அவர்களின் குறைபாடுகளை கண்டறியவும் தனி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஒவ்வொரு அலுவலகத்திலும் இருப்பார்.

இத்தகவலை பொது நிர்வாகம், மாகாணசபை, உள்நாட்டலுவலகங்கள் துணை அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்தார். [க-எ]

## விழிப்புலன் இழந்தவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும்

### மகளிர் ஆண்டுவிழாவில் உரை

காங்கேசன்துறை ஏப் 4

"விழிப்புலன் இழந்தவர்களின் மனதில் விரக்தி ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். உதவி வழங்கும் பொது ஸ்தாபனங்கள் இந்த வாழ்வகத்துடன் தொடர்பு கொண்டு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும் விழிப்புலன் இழந்தவர்களையும் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இணைத்துக் கொள்ள வேண்டும்.

தெல்லிப்பழை விழிப்புலன் இழந்தோர் வாழ்வகத்தில் இடம் பெற்ற தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மகளிர் குழுவின் மகளிர் ஆண்டு விழாவில் உரையாற்றும் பொழுது சட்டத்தரணி வி. எஸ் கணேசலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மகளிர் குழுத்தலைவி செல்வி சசிதேவி கந்தையா விழாவுக்குத் தலைமை வகித்தார்.

இவ் வாழ்வக சிறார்களுக்கு சிற்றுண்டி அன்பளிப்பு வழங்கப்பட்டன.

வாழ்வக பொறுப்பாசிரியை செல்வி சின்னத்தம்பியின் சேவையைப்பாராட்டி பலரும் உரையாற்றினர்.

வாழ்வக சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன [ச-68]

## பதில் பிரதம நீதியரசர்

கொழும்பு, ஏப்ரல் 4

பதில் பிரதம நீதியரசராகத் திரு. ஈ.ஏ.டி. அத்துக்கோரள கடந்த வியாழன் ஜனாதிபதி பிரேமதாஸ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார்.

பிரதம நீதியரசர் பரிந்தா ரணசிங்கா பிரிட்டனுக்கு பயணமானதைத் தொடர்ந்தே பதில் பிரதம நீதியரசர் நியமனம் செய்யப்பட்டார். (ஒ-எ)

## "ராஜா" வின் நினைவாக முத்திரை

அண்மையில் மரணமான கண்டி, தலதா மாளிகையின் யானை ராஜாவின் நினைவாக தபால் திணைக்களம் வருகிற ஜூலை 16ஆம் திகதி தபால் முத்திரை ஒன்றை வெளியிட இருக்கிறது.

இத்தகவலை தியவதன நிலாமை திரு. நிரஞ்சன் விஜேரத்ன வெளியிட்டார். (உ-எ)

## ஈரோஸ் உறுப்பினர்கள் மீது வன்முறை புரிவதை கண்டிக்கிறது

### ஈழவர் ஜனநாயக முன்னணி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

ஈரோஸ்உறுப்பினர்கள்கடத்தப்படுவது, தாக்கப்படுவது மற்றும் வன்முறைச் சம்பவங்கள் ஆகியன குறித்து ஈழவர் ஜனநாயக முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. வே.பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

பொதுத்தேர்தல் அண்மித்த காலத்திலிருந்து இன்றுவரை தொடரும் செயலாக ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்றன. எதுவித காரணமுமற்ற நிலையில் இப்படியான வன்முறைகள், கொலைகள் எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டமையின் பின்னணியைத் திட்டமிட்ட ஓர் அரசியல் சதியாக நாம் கருதவேண்டியுள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு, அம்பாறை, திருமலைப் பகுதிகளில் மிக மோசமாக பின்வரும் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. சித்தாண்டியில் தோழர்கள் வரதனும், சாண்டோவும் கடத்தப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்புவரும் வழியில் தோழர்கள் மேகநாதன். சுரேஷ் ஆகியோர் காணமல் போய்விட்டார்கள். திருமலையில் தோழர் ஜெயபால் கடத்தப்பட்டுள்ளார்.

கல்முனையில் தோழர் பாஸ்கரனின் வீடு முற்றாக அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. கல்முனையில் எமது அலுவலகத்திலிருந்த ஐந்து தோழர்கள் கடத்தப்பட்டதுடன் அலுவலகத்தின்மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளது.

31-03-1989 அன்று எமது தோழர்களான நவரட்ணம், அன்பழகன் (முருகன்), செல்வா, இந்திரன் ஆகியோர் கடத்தப்பட்டு பலத்த முயற்சியின் பின் விடுவிக்கப்பட்டனர்.

எவ்விதமான காரணமுமின்றி எமது தோழர்கள் மீதும், ஆதரவாளர்கள் மீதும் நமற்கொள்ளப்பட்டு வரும் டேவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

## ஜனாதிபதிதேர்தல் ஆட்சேப மனு

கொழும்பு, ஏப்ரல். 4

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனுவை விசாரணைக்கு எடுப்பதா? இல்லையா? என்பது சம்பந்தமான தீர்ப்பு மேமாதம் 2 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் வழங்கப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிசெய்யப்பட்டதை ஆட்சேபித்துசுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார். [ஒ-எ]

## உடன் வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (Blowers) கெல்ப்பர் (Helpers) பபுளர் (Bubblers) போன்றவர்களும்

அனுபவமுள்ள (Bottle Machine) இயக்குநரும் கெல்ப்பரும் தேவை.

அனுபவத்திற்கும் வேலைத்திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

16 — 19 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கும் தேவை.

நேரில் வரவும்:

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி

(10442)

MODERN EDUCATION CENTRE

KARAVEDDY

பெற்றோரின் வேண்டுகோளுக்கிணங்க Science Centre இல் ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 ஆரம்பமாகிறது.

ஆரம்பம்: 03-04-1989

திங்கள் பி. ப. 3 மணி

(10446)

ஒரே நேரத்தில் பல கமெராக்களுடன் நவீன மிக்ஷரின் உதவியுடன் பல கோணங்களில் மனங் கவரும் வண்ணம் - அழகு வர்ணத்தில்

வீடியோ படம் பிடிப்பதற்கு

யூனிபெக்ஸ் வீடியோ

Unipex Video

கோண்டாவில் வடக்கு,

கோண்டாவில்.

(சிவகாமி அம்மன் கோயில் அருகாமை)

[10233]

## பதவி வெற்றிடங்கள்

சுகாதார சேவைகள் திணைக்களம், வவுனியா.

முன்பயிற்சி மாணவ குடும்ப நல சேவையாளர் பதவி வெற்றிடங்களுக்கு (பெண்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

1. விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2. 1 - 4 - 89 ல் 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
4. கல்வித்தகைமைகள்:-

   க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றுள் தமிழ் மொழி, கணிதம் ஆகிய இருபாடங்களிலும் திறமைச் சித்தியும், வேறு இருபாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை மேற்கூறிய விபரங்களுடன் தயாரித்து சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், வவுனியா என்ற விலாசத்திற்கு 20 - 4 - 89 க்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

டாக்டர் க. மாணிக்கம்,

சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,

வவுனியா.

[சி/2051]

மானிப்பாய் கோவில் பற்று

ப நோ. கூ. சங்கம்

கூறுவிலை கோரல்

சங்கத்தில் உள்ள கைத்தறி தறிகள் விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் 15.04.89 பி. ப. 4.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். தறிகளை சங்க வேலைநேரத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்

(சி/2131)

## ★ திருமணம் ★

அன்புடையீர்!

விபவ வருஷம் பங்குனித்திங்கள் 14ஆம் நாள் [27-03-89] திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு திருநெல்வேலி சிவஸ்ரீ சோ. மகாகணபதி குருக்களின் ★ சிரேஷ்ட புத்திரன் ஸ்ரீ ரங்கநாதசர்மாவுக்கும் (ராஜன்) ★ பருத்தித்துறை சிவஸ்ரீ பா. ஷண்முகரத்தினக் குருக்களின் ★ சிரேஷ்ட புத்திரி பாமாதேவிக்கும் ★ Bochumerstr 138 4630 130 Chum - 6, W. Germany யில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இங்ஙனம்

சோ. மகாகணபதிக்குருக்கள்,

திருநெல்வேலி கிழக்கு,

பாரதி விலாஸ்.

[10259]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டத்தில்

## லைசென்ஸ் பெருத துப்பாக்கிகளை திருப்பிப் பெற உத்தரவு

அம்பாறை மாவட்டத்தில் இருந்து லைசென்ஸ் பெருமல் பாவிக்கப்படும் சகலதுப்பாக்கிகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இத்தகவலைப் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதுபற்றி முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. ஜனுப் அஸ்ரப் கேள்வி ஒன்றை எழுப்பினர்.

அதற்கு அமைச்சர் விஜேரத்ன பதிலளித்துப் பேசுகையில் சொன்னதாவது:

கிழக்கில் பலர் துப்பாக்கிகளுடன் நடமாடுவதுதான் நிலைமையைக் குளறுபடியாக்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்மக்கள் மத்தியிலும் பிளவு ஏற்பட்டுள்ளது. ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகவும் குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. முஸ்லிம் மக்களை மேலும் நாம் பிரிக்க விரும்பவில்லை.

கிராம மட்டத்தில் அரசியல் தலைவர்களால் தெரிவுசெய்யப் படுபவர்கள் ஊர்காவல்படையினராக நியமனம் பெறுவர். ஆயுதம் வைத்துள்ளவர்களைக் கட்டுப்படுத்துவது பொலீஸாருக்கும் ஆயுதப்படையினருக்கும்பெரும்கஷ்டமானகாரியம்.

இப்படி துணைஅமைச்சர் சொன்னார். (இ-எ)

## கால் நடைகள் மரணம் அதிகரிப்பு

குருநகர், ஏப். 4

யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகள் இறப்பது அதிகரித்துக் காணப்படுகிறது.

கால்நடை மரணங்கள் அதிகரிக்கக் கடும் வெயில் காரணமாக இருக்குமோ என மக்கள் அஞ்சுகிருர்கள். இது குறித்து மிருக வைத்தியப் பகுதியினர் உரிய கவனம் எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொள்கிருர்கள்.

இறக்கும் கால்நடைகளில் கோமாரி நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட கால்நடைகளும் அடங்கியுள்ளன என்று அறிய வருகிறது.

வண்ணர்பண்ணை மேற்கில் உள்ள லோட்டஸ் வீதியைச் சேர்ந்த ஒருவர் வீட்டில் மூன்று மாடுகள் இவ்வாருக இறந்துள்ளன.

மேலும் ஒரு மாடு தடுப்பூசி போட்ட பின்னரும் கடும் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும் - இது பற்றிக் கால்நடை பராமரிப்பு நிலையத்தினரிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் அறிய வந்துள்ளது. (க-51)

## வை. எம்.சி. ஏ. அளிக்கும் பயிற்சி

மானிப்பாய், ஏப்ரல் 4

உடைதயாரித்தல், சமையல் கலை, வீட்டு அலங்காரம், கைப்பொருள் பணி உற்பத்தி, சிகையலங்காரம், போன்ற பல்வேறு துறைகளில், படித்துவிட்டுவேலையற்றிருக்கும்பெண்களுக்கு வை. எம். சி. ஏ. பயிற்சிகள் அளித்து வருகின்றன.

மனையியல் கலையியல் துறைகளில் டிப்புளோமா பயிற்சிகளை முடித்துக்கொண்டு முதல் குழு மாணவிகள் வெளியேறியுள்ளனர்.

மேலும் முப்பது மாணவிகள் இரண்டாம் குழுவில் பயிற்சி நெறியாளர்களாக விரைவில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. (க-9]

வலய மெய்வல்லுநர் போட்டியில்:

## மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு நான்கு வெற்றிக் கேடயங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 4

மானிப்பாய் வலய பாடசாலைகளுக்கிடையேயானமெய்வல்லுநர் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி நான்கு வெற்றிக் கேடயங்களைப் பெற்றது.

13, 15, 17, 19 ஆம் வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டிகளில் சிறந்த வீராங்கனைகளுக்கான கேடயங்களை மானிப்பாய் மகளிர் கல்லூரியே தட்டிக் கொண்டது.

13 வயதுக்குட்பட்ட வீராங்கனையாக றெபினி சகிலாவும் 15 வயதுக்குட்பட்ட வீராங்கனையாக துஷாந்தி சர்வேஸ்வரனும் 17 வயதுக்குட்பட்ட வீராங்கனையாக ஜெயந்தி துரைஐயாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பவளராணி வடிவேலும் தேவாம்பிகை மகாதேவனும் 19 வயதுக்குட்பட்ட இணை வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். [ச]

## மாகாண சபை பொறுப்பேற்கும்

வவுனியா ஏப்ர: 4

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் நீர்ப்பாசனத்திட்டம், மன்னர் மாவட்டத்தில் உள்ள கட்டுகரைக் குளம் ஆகிய இரண்டு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் வடகிழக்கு மகாண அரசின் பொறுப்பின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மாகாண சபை மேற்கொண்டுள்ளது.

இத்தகவலை மாகாணசபை உறுப்பினரான திரு. எஸ். ஜெயேந்திரன் தெரிவித்தார். (ச-164)

## வேட்பாளராக நின்று உயிரிழந்த அரச ஊழியருக்கு நஷ்டஈடு

கொழும்பு ஏப்ரல் 4

பதவிகளை ராஜினமாச் செய்துவிட்டு பொதுத்தேர்தல், மாகாண சபைத் தேர் ஆகியவற்றில் போட்டியிட்டு பின்னர் உயிரிழந்த அரசு ஊழியரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்

ஓய்வுபெறும் வயதுக்குரிய காலம் வரும்வரை உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மாதாமாதம் சம்பளம் வழங்கப்படும்.

பென்ஷன் பெறும் வயதுக்குரிய காலம் வந்த பின்னர் பென்ஷன் வழங்குவது ஆரம்பமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். [ஓ-எ]

## இடமாற்றம்

புதுக்குடியிருப்பு, ஏப்ரல் 4

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபையின்பிரதம எழுதுவினைஞராகச் கடமை பார்த்து வந்த திரு கே. ஜி. அசஸ்தீன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உபசெயலாளராக இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-126)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

03- 04- 1989



நடராசா யோகராசா

வையகத்தில்: 05-11-1956

வானகத்தில்: 28-03-1984

அன்பு யோகம்!

எத்தனை கோடி ஆண்டு சென்றாலும் எங்கள் உள்ளத்தில் ஒளி வீசும் உமது புன்னகை தவழும் இனிய அன்பு முகம் எங்கள் உள்ளத்தை விட்டகலா;

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அம்மா அக்காமார், அண்ணன்மார், அத்தான்மார், அண்ணி, மருமக்கள், பெருமகன்கள், உறவினர், நண்பர்கள்.

7, ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

(10428)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1963 | 11 | 24



உதிர்வு: 1988 | 03 | 15

செல்வி நவரத்தினம் யோகேஸ்வரி

திதி: 03-04-1989

வெள்ளை மனத்துடனே
கள்ளம் சிறிதுமின்றி
சிரிக்க சிரிக்கப் பேசி — எம்மை
சிந்திக்க வைத்தாய்!
சொந்தத்தில் ஓர் கதை எழுத ஆரம்பித்தோம்!
அதில் சோகமாய் ஓர் அத்தியாயம் முடிந்ததுவே.
உன் நினைவுக் கோலங்கள் - என்றும்
அழியாத கோலங்கள் ஆகி விட்டது!
எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்

அப்பா, அம்மா, அண்ணு, அக்கா, தங்கைமார். தம்பிமார், நண்பர்கள்.

கேரதீவு வீதி,
தனங்கிளப்பு.
சாவகச்சேரி.

(10445)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



எமது அன்புத் தெய்வம்
திரு. கந்தப்பிள்ளை செல்வரெத்தினம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

தோற்றம்: 16-06-1934

மறைவு: 04-03-1989

அன்னரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், சரீர உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03-04 1989) திங்கட்கிழமை கீரிமலையிலும் ஆத்ம சாந்திக் கிரியைகளும், மதிய போசனமும் அன்னரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தவருது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், குடும்பத்தினர்.

'மணிபவனம்'
நடேஸ்வராக்கல்லூரிவீதி,
காங்கேசன் துறை.

(10255)

## A/L 91

பொருளியல்

உதயன்

ஆரம்பம்: 3- 4- 1989
திங்கள்: 5.00 p.m

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்,
கொக்குவில்.

(C/ 2117)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தம்பையா சதானந்தன்

தோற்றம்: 17- 3- 1954
மறைவு: 16- 3- 1988
திதி: 3- 4- 1989

கண்ணீருடன் நினைவு கூரும்:

அன்பான அப்பா, சித்தப்பாமார், சித்திமார், சகோதரர்கள்.

சரசாலை,
சாவகச்சேரி.

(62)

யா/கொக்குவில் நாமகள் வித்தியாலயம் பாடசாலை அபிவிருத்திச் சபை

## பொதுக்கூட்டம்

யா/கொக்குவில் நாமகள் வித்தியாலய அபிவிருத்திச் சபை வருடாந்த பொதுக்கூட்டம், 1989 ஏப்பிரல் மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் யாவரும் தவருது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
செ. சிவரத்தினம்
கௌரவ செயலாளர்.

[54]

## UNISERVICES EN.INEERS

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் பிரதான வேலைத்தலமும், அலுவலகமும், 19. ஆசிர்வாதம் லேன், ஆஸ்பத்திரி, வதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியிலும் கிளை ஸ்தாபனம், ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாயிலும் இயங்குகின்றது. இவற்றைத் தவிர எமக்கு வேறு எந்த கிளை ஸ்தாபனமோ அலுவலகமோ யாழ்நகரில் இல்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

யுனிசேர்விசஸ் இன்ஜினியேர்ஸ்

[C/2056]

- ★ குளிர்சாதனப் பெட்டி D/Freezer
- ★ எயர்கொன்டிசன், மின்மோட்டர்
- ★ மிக்சர், மின்விசிறி மற்றும் சகலவிதமான
- ★ விட்டு மின்சார உபாரணங்களின் திருத்த வேலைகளுக்கும்,
- ★ ரீ.வி, டெக், றேடியோ போன்றவற்றின் திருத்த வேலைகளுக்கும் எம்மால் குறித்த தவணையில் நியாயமான கட்டணத்தில், உத்தரவாதத்துடன் மேற்கொள்ளப்படுகிறது.

யுனிசேர்விசஸ் இன்ஜினியேர்ஸ்
19, ஆசிர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

C/2055

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமான் கந்தையா விசுசித்தம்பி

தோற்றம்: 24-06 1912

மறைவு: 05- 03- 1989

அன்னரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் 4-4-1989 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை
கொக்குவில்.

[10246]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும்

# தீவிரவாதிகளுக்கு பொது மன்னிப்பு; நாடாளுமன்றத்தில் ஆசனங்கள்!

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப் 4

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாய வழிக்குத் திரும்பும் தீவிரவாதக் குழுக்களுக்கு பொதுமன்னிப்பும் நாடாளுமன்றத்தில் ஆசனங்களும் வழங்கும் திட்டம் ஒன்றை ஜனாதிபதி பிரேமதாசா வெளியிட்டுள்ளார்.

கண்டி, கிரன்துரு கோட்டையில் நடந்த இளைஞர் விழாவில் பேசுகையில் இத்திட்டம் பற்றி ஜனாதிபதி அறிவித்தார்.

தேசியப் பட்டியல் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த நாடாளுமன்ற ஆசனங்களை தீவிரவாதக்குழுக்களுக்கு வழங்க நான் தயாராக உள்ளேன் — இப்படி ஜனாதிபதி சொன்னார்.

ஜனாதிபதி பிரேமதாசா மேலும் சொன்னதாவது;

சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் இளைஞர்கள் முன்னர் பழிவாங்கப்பட்டனர். அதன் காரணமாகவே இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் நாட்டம் காட்டினர் என்று எண்ணுகிறேன்.

ஜனநாயக வழிக்கு திரும்பும் தீவிரவாதிகளுக்கு பொது மன்னிப்புடன் நாடாளுமன்ற ஆசனங்களை வழங்கவும் தயாராக உள்ளேன்.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைய விரும்பும் தீவிரவாதிகளை ஏற்றுக் கொள்ள நாடெங்கும் 200 வரவேற்புக் கூடங்கள் அமைக்கப்படும்.

சிங்கள, தமிழ் தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடாமலே அல்லது அரசிடம் ஒப்படைக்காமலே, யாரிடமும் சரணடையாமலே ஜனநாயக பாதைக்குத் திரும்பலாம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவும் சிறைகளில் உள்ள சகல அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் நான் தயாராக இருக்கின்றேன்.

ஆயுதங்களைக் கீழே போட வேண்டிய தேவையில்லை; அவர்கள் யாரிடமும் சரணடைய வேண்டிய தேவையும் இல்லை. ஜனநாயக பாதைக்குத் திரும்பி நாட்டின் மறுமலர்ச்சிக்கு தங்களை அவர்கள் ஈடுபடுத்திக்கொள்ளலாம்.

இப்படி அவர் தெரிவித்தார். [இ-எ]


## லொறி 'பொடி' அடித்தல்

எமது சங்கத்தின் புதிய இசூஸ் லொறிக்கு 'பொடி' அடிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 10-4-89 அன்று அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். தபால்மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட, முத்திரையிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா 5/- தபாற் கட்டளை செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.

[C 2057]



★ விக்னு ★
டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

O/L
DAY CLASSES (8.30 - 1.30)
(புதிய பழைய பாடத்திட்டம் பிரிவு - 2)
EVENING CLASSES
பிரிவு - 3 (3.00 – 5.00)

ஆரம்பம்:- 05 - 04 - 89

ஆண்டு 10, 9, 8, 7, 6 ஆரம்பமாகிவிட்டன.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. சூரி |
| தமிழ், சமயம்:- | திரு. திருப்பதி |
| கணிதம்:- | திரு. செல்வா |
| வர்த்தகம்:- | திரு. கருணாகரன் |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி:- | திரு. சுந்தரமூர்த்தி |

முக்கிய குறிப்பு: -கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.

[C-2126]


## யாழ். வந்த பொருள்கள் சீதுவையில் லொறியுடன் கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்ட சீனி உட்பட்ட பொருள்கள் பலவும் லொறியுடன் கடத்திச் செல்லப்பட்டன.

இனந்தெரியாத சிலர் சீதுவைப்பகுதியில்வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுமார் 8 மணியளவில் மேற்படி லொறியைக்கடத்திசென்றனர்

லொறியில் 150 மூடை சீனி 10 தேங்காய் எண்ணெய் பரல்கள் மற்றும் சர்க்கரை 15 மூடைகள் என்பனவும் அடங்கி இருந்தன. மொத்தம் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவரப்பட்டபோது லொறி கடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட லொறி அடுத்த நாள் பொருள்கள் அகற்றப்பட்ட நிலையில் அதே இடத்தில் அனாதரவாக விடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி லொறி வட பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானதாகும். (ஒ)

## இன்னும் உரிமை கோரப்படவில்லை

கடந்த 29 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த பெண்ணின் சடலம் இன்னும் உரிமை கோரப்படாத நிலையில் யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கொலையுண்டவர் செல்வரத்தினம் செல்வரஞ்சனி (வயது 25) என்பது தெரிந்ததே. 1983 இல் வழங்கப்பட்ட அவரது அடையாளக் கார்ட்டில் பாடசாலை லேன், கோண்டாவில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் கொலையுண்ட சமயம் மண்ணிற சேர்ட்டும், கறுப்பு நிறஅரைப்பாவாடையும் அணிந்திருந்தார். (ஒ-9)

## "நாணு"வை விடுதலை செய்ய ஈ. பி. ஆர். எல். எப். கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 4

திருகோணமலை வந்திருந்த சமயம் கடத்தப்பட்ட நாணுவை விடுதலை செய்யுமாறு ஈ. பி. ஆர். எல். எப். வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கை வருமாறு;

எமது மக்களிடையே இன்று நிலவிவரும் நம்பிக்கையீனம், விரக்தி, இரக்கமற்ற தன்மை ஆகியவற்றை இல்லாதொழிக்கும் நோக்குடனும், தமிழ் மக்கள் மத்தியிலும், இயக்கங்கள், கட்சிகள் மத்தியிலும் ஐக்கியத்தை உருவாக்கும் அடிப்படை நோக்குடனும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அனைத்து தமிழர் அமைப்புகளையும் உள்ளடக்கிய தேசியசபை ஒன்றை நிறுவுவதற்காக எடுத்துவரும் முயற்சி வெற்றிபெறும் சூழ்நிலை எட்டியுள்ளது.

இவ்வேளை ஐக்கியத்திற்கானதும், ஆயுதமற்ற சூழ்நில உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டும் வடகிழக்கு மாகாணசபை நடாத்தத் திட்டமிட்டிருந்த தமிழர் அமைப்புக்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக திருமலை வந்திருந்த திரு. குமாரவடிவேல் (நாணு) கடத்தப்பட்டிருப்பது குறித்து நாம் மிகுந்த வேதனை அடைகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் சுயேட்சைக்குழு ஒன்றிற்கு தலைமைவகித்து மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்ட திரு. குமாரவடிவேலு கொல்லப்படுவதால் ஐக்கியத்திற்கான முயற்சிகள் பாதிக்கப்படுவதாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே நிரந்தரமான அமைதி, நிரந்தரமான சமாதானம், நிரந்தரமான யுத்த நிறுத்தம் என்பவற்றை ஏற்படுத்தும் கொள்கையை உருவாக்குவதாகக் கூறுவோர் கூறும் ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுப்பது உண்மையானால், தடுத்து வைத்திருக்கும் 'நாணுவை' உடன் விடுவிக்க வேண்டுமெனவும், அதே சமயம் தமிழர் அமைப்புக்களை உள்ளடக்கிய தேசிய சபைக் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.


PERSONAL CLASSES
B. M. C. முன் லேன் - யாழ்ப்பாணம்
(A/L 89 Day Classes)
இன்று ஆரம்பம்!

✻ தாவரவியல்
திரு. சர்வானந்தா B.Sc. (Cey)
சூழலியல் (Ecology)
Mon, Wed & Fri 7.15 — 8.15 a m

✻ இரசாயனவியல்
திரு. மதுரமணி B.Sc. (Cey)
Organic Chemistry
Tue & Thu 7.15 — 8.15 a.m
Physical Chemistry
Tue, Wed & Thu 3.00 — 4.00 p.m

✻ விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன் B.Sc. (Cey)
பிறப்புரிமையியல் (Genetics)
Mon to Fri 11.30 — 12.30 p.m

✻ பௌதிகவியல்
திரு. சத்தியசீலன் B.Sc. (Cey)
மின்னோட்டத்தினால் ஏற்படும் காந்த விளைவுகள்
Mon to Fri 8.30 — 9.30 a.m

(C/2058)


## ஜனாதிபதியுடன் பேசுவார்

கொழும்பு, ஏப் 4

எதிர்வரும் 6 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் ஜனாதிபதி பிரேமதாஸாவை அவரது இல்லத்தில் சந்தித்துப்பேச்சுகள் நடத்தவுள்ளார். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)


அந்தியேட்டியும்
31ஆவது நாள் நினைவஞ்சலியும்

சின்னப்பு நமசிவாயம்

தோற்றம்: 17 - 06 - 1917
மறைவு: 05 - 03 - 1989

அளவெட்டி வடக்கு அழகொல்லையைச் சேர்ந்தவரும், மலேசியா ஆகேடியா தோட்ட நிர்வாகியுமான சின்னப்பு நமசிவாயம் 5-3-89 இல் மலேசியாவில் காலமானார்.

4-4-89 செவ்வாய் காலை கீரிமலையில் அந்தியேட்டியும் அழகொல்லை வளவில் பகல் போசனமும் இடம் பெறும். உறவினர், நண்பர்கள் தயவு செய்து பங்கு பற்றவும்.

உடன் பிறந்தோர்,
மகேச மஹால், திருவதிகை,
உசன், மிருசுவில்.

[67]



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செ. சிறீதரன் (சின்னக்கோபு)

தாயின் மடியில்: 02- 09- 1966
தாயக மண்ணில்: 06- 04- 1986

திதி: 04- 04- 1989

முன்னவனே உனை இழந்து
மூன்றாண்டுகள் சென்றாலும்
உன் உறுதி உன் நினைவு
உன் இலட்சியப் பயணம்
இன்றும் இங்கு இப்பொழுதும்
எம் மனதில் நிழலாடும்
வீர மைந்தா நீ இறவாமல்
தீர மறவர் நெஞ்சில் வாழ்கின்றாய்!

பெற்றோர், உடன்பிறந்தோர்
உறவினர்கள், நண்பர்கள்.

கே. கே. எஸ். றோட்,
வல்வெட்டித்துறை.

(C/2134)



RASI SILK'S
ராசி சில்க்ஸ்

1ஆவது ஆண்டு நிறைவு

முதலாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில்.......

எங்கள் அன்புமிகு அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள், கடமையுணர்வு மிக்க ஊழியர்கள் மற்றும் அனைவரதும் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வேண்டி நிற்கிறது.

மங்கள வைபவங்களுக்கேற்ற உடுபுடைவைகளுக்கு நாடுங்கள்:

RASI SILK'S
70, NEW MARKET, JAFFNA.

[C-2133]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தலாவது ஆண்டு நினைவஞ்சலி



இணுவில் மேற்கு
அமரர் சின்னையா கந்தையா
(சமாதான நீதிவான்)

தோற்றம்:- 10-07 19 4
நிறைவு:- 15-03-1988

திதி:- 04 - 04 - 1989

ஓராண்டு சென்றாலும் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்தீர்களே! உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன், சகோதரி,
மற்றும் உறவினர்கள்

இணுவில் மேற்கு,
இணுவில்.

(63)

## 3 ஆம் வருட நினைவஞ்சலி



திருமதி சின்னம்மா சிதம்பரம்

மலர்வு: 04-04-1935
உதிர்வு: 04-04-1986

காலங்கள் எத்தனை
சுழிந்திடினும் — எம்
நினைவுகள் என்றுமே
உன்னைத் தேடும் — உன்
அன்பிற்காய் நித்தமும்
இவ் உலகில் வாடும்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

சிதம்பரம் வளவு,
மயிலிட்டி.

(10179)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் தம்பு பத்மநாதன்
(இளைப்பாறிய பதிவாளர், யாழ் நீதிவான் நீதிமன்றம்)

தோற்றம்: 04-09-1930
மறைவு: 07-03-1989

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 5-4-1989 புதன்கிழமை வேலணை சாட்டிமடத்திலும், 6-4-1989 வியாழக்கிழமை ஆத்ம சாந்திக் கிரியைகளும் மதிய போசனமும் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், சரீர உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொ. சபாரட்ணசிங்கமும்
பாரியாரும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(74)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15-12-1933

மறைவு: 14-04-1988

திதி: 04-04-1989



நாகமுத்து ஆறுமுகம்

இல்லத்தின் ஒளி விளக்கே! நீங்கள் இல்லாமல் ஓராண்டு சென்றதே! நிலவுலக நிஜவாழ்வை எம்மால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. உள்ளத்தால் மறக்க வில்லை. உத்தமருக்கு கரையில்லாக் கண்ணீர் பூக்களால் அஞ்சலி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, பிள்ளைகள், பெருமக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உற்றார், உறவினர்கள்.

447, ராமலிங்கம் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/1597)

ஓம் சாயிராம்

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



உடுவில் கிழக்கு
**Raosahib**
**Sinnathamby Sivapragasam**
(Siva)
Textile Technologist Textile Branch,
Kachchery, Jaffna.

அன்னை மடியில்: 02-08-1933
ஆண்டவன் அடியில்: 05-03-1989

அன்பின் சிவா! எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் நகர்ந்து விட்டன. எம்மால் நம்பவே முடியவில்லை. எமது அன்புஉள்ளங்கள் உம்மைப் பிரியவில்லை. உமது நினைவுகள் எம்மை வட்டு அகலவில்லை. எங்கள் அன்புக் கண்ணீர் அலைகள் ஓயவில்லை. உமது ஜீவாத்மா பரமன் சாயீசன் திருவடியில் அமைதி பெற எங்கள் அன்பு இதயங்களால் பிரார்த்திக்கின்றோம்.

அன்புமறவாத மனைவி, தாய்,
சகோதர சகோதரிகள், மாமன், மாமி,
மைத்துணர்மார், மைத்துனிமார், பெருமக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதவி அரசாங்க அதிபர் பங்களா,
பெரியமதவடி,
உடுவில்.

(84)

## மக்னமாரா விஜயம்

யாழ்ப்பாணம், ஏப். 4

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரொபேர்ட் மக்னமாரா இவ் வார ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை ஒன்றை மேற் கொண்டிருந்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கண்டியில் தலைமையகத்தைகொண்டு இயங்கிவரும் அனைத்துலக நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனத்தின் கூட்டத் தொடர் ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார்.

(க-9)

## வண்ணார்பண்ணை கடையில் திருட்டு

குருநகர், ஏப். 4

யாழ். வண்ணார்பண்ணை மேற்கில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பலசரக்குக் கடை ஒன்றில் திருட்டு நடைபெற்றது.

முருகமூர்த்தி வீதியில் பிரஸ்தாப கடையின் பூட்டுக்கள் வாளால் அரிந்து கதவைத் திறந்த திருடர்கள் சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றனர். (ஓ-51)

## முகவர்களுக்கு பயிற்சி

முல்லைத்தீவு, ஏப். 4

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவாகியுள்ள ஜனசக்தித் திட்ட 400 முகவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் முல்லைத்தீவு கச்சேரி, வித்தியானந்தாக் கல்லூரி, முல்லை. மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன.

முல்லைத்தீவின் புதிய உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி துரித வேகத்தில் வகுப்புக்களை நடத்த நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-92)

## நிர்வாக அதிகாரியாக நியமனம்

அரியாலை, ஏப்ரல் 4

யாழ்.செயலகத்தில் அமைய இருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதல் அமைச்சர் அலுவலக நிர்வாக அதிகாரியாக திரு. விஸ்வலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமை புரிந்தவராவார்.

[ஓ-ரி]

## உடுகம்பொல வெளிநாடு பயணம்

வடமத்திய பிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல ஒருமாதகால விடுமுறையில் வெளிநாடு சென்றார்.

இவ் விடுமுறை சென்ற முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.

திரு. உடுகம்பொலவின் மனைவி, குழந்தைகள் கடந்த ஆண்டு இறுதியில் வெளிநாடு சென்றனர். (ஓ-எ)

Dr கலைஞர் மு. கருணாநிதி விளையாட்டுக் கழகமும், கிராம முன்னேற்றக் கல்வி நிலையமும் நடாத்தும்

## பொது அறிவுப் போட்டி 1989

முதலியார் கோவிலடி, வட்டுக்கோட்டை.

மேற்படி 1-4-89 ஆம் இருந்த எமது பொது அறிவுப் போட்டி முடிவுகள் சில பாடசாலைகளிலிருந்து பதில்கள் வராத காரணத்தாலும் சில பாடசாலைகள் போட்டியில் பங்குபற்ற ஆர்வம் தெரிவித்திருப்பதாலும் 25. 5. 85 க்கு பின்போடப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது. குறையிருப்பின் மன்னிக்கவும்.

நன்றி.

இங்ஙனம்,
நிலைய நிர்வாகம் சார்பாக
போட்டி ஆலோசகர்,
T. P. பிறுட்மண்,
S. சிவராஜ் (வி.க. தலைவர்).

(69)

## எமது ஒறிஜினல் வெளியீடுகள்

M. G. R இன்

(1) கலங்கரை விளக்கம்
(2) தொழிலாளி
( ) பறக்கும் பாவை
(4) நீரும் நெருப்பும்
(5) நீதிக்குப் பின் பாசம்

இவை அனைத்தும் ஒறிஜினல் பிரதிகள்

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[C-2132]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 30-9-1943

மறைவு: 6-3-1989

திரு. சினிவாசகம் தணிகாசலம்
[ஆசிரியர்]

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் 6-4-1989 அன்று நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன்,
சகோதர சகோதரிகள், தாய்

பன்னாலை,
தெல்லிப்பளை.

[66]

## கட்டட ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

### முல்லைத்தீவு பிரதேசக் கல்வித்திணைக்களம்

முல்லைத்தீவு பிரதேசக் கல்வித்திணைக்களப் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தம் செய்வதற்கெனப் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து இத்திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஒப்பந்தக்காரர்கள் முன்னர் செய்த வேலைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்த அத்தாட்சிப் பத்திரத்துடன் பதிவுத் தபால்மூலம் 1989-04-18ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முல்லைத்தீவுக் கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்களம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பதிவுத் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

02. பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 100/- ஆகும். இப்பணம் காசோலை காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை மூலம் முல்லைத்தீவு பிரதேசக் கல்விப்பணிப்பாளருக்கு செலுத்தக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே வழமையாக ஏற்றுக்கொள்ளப்படும். எனினும் இதற்கு மாறாகச் சில சந்தர்ப்பங்களில் வேறு ஸ்தாபனங்களிடமிருந்தும் தேவையேற்படும்போது கேள்விப்பத்திரங்களை அவர்களுக்கு வழங்கும் உரிமையை கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் உரிமை பெற்றுள்ளார் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எஸ். எஸ். மனோகரன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

கல்வித்திணைக்களம்,
முல்லைத்தீவு,
30-03-1989

(C/2130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
பேணது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும்.

**பொருள்:**
சொந்த ஆலோசனை இல்லாமல் மனைவி சொன்னதை எல்லாம் கேட்கிறவனுடைய வாழ்க்கை அவனுக்கு அவமானத்தை உண்டாக்கித் தலைகுனியச் செய்யும்.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
04 - 04 - 1989 த. பெ. இல: 23

## மருந்து விலையும் இறக்குமதியும்

மேற்கத்திய வைத்தியத்துக்குத் தேவையான (ஆங்கில) மருந்து வகைகளின் விலைகளை அண்மையில் அரசாங்கம் குறைத்திருந்தது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆயிரத்துக்கும் அதிகமான வகைகளைச் சேர்ந்த மருந்துகளின் விலைகளைக் குறைக்குமாறு விற்பனையாளர்களைச் சுகாதார அமைச்சு கேட்டிருந்தது; இல்லை, இல்லை பணித்திருந்தது.

ஆனல், நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மருந்து விற்பனையாளர்களில் அனேகமானவர்கள் "மசியவில்லை"! சுகாதார அமைச்சின் பணிப்புரைக்குச் செவிசாய்க்கவில்லை. தொடர்ந்தும் பழைய விலைகளுக்கே மருந்து வகைகளை விற்று வருகிறார்கள்.

மருந்துகள், உணவுப் பொருள்கள் போன்று மக்களுக்கு அத்தியாவசியமானவை. உணவு இல்லாவிட்டாலும் ஒரு வேளையைக் கடத்தலாம்; ஆனல் உரிய மருந்து வேண்டிய நேரத்தில் இல்லை என்றால் உயிரே போய்விடக்கூடும். ஆகையால் உணவுப் பொருள்களை விட, மருந்து வகைகளுக்கு முதன்மை இடம் தரப்பட வேண்டும்.

அண்மைக்காலமாக விலைவாசிகள் உயர்வோடு, மருந்து விலைகளும் "எக்கச்சக்கமாக" அதிகரித்துவிட்டன. சாதாரண மனிதனுக்கு, பணவசதி குறைந்த மனிதனுக்கு மருந்து வாங்குவது என்பது இயலாத விடயமாகிவிட்டது.

இலவச சிகிச்சை அளிப்பதற்கென உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு. அங்கிருந்து மருந்துகள் எல்லோர் கண்களையும் மூடிவிட்டுத் தனியார் மருந்துச்சாலைகளுக்குப் போய்ச் சேருவது பழைய கதை. இந்தச் சூழ்நிலையில் அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டரும், வெளியில் மருந்து வாங்குமாறு ஒரு துண்டுக் காகிதத்தைக் கொடுத்துவிடுகிறார்!

ஆனல், பாவம், உயிர் ஆபத்தை எதிர்நோக்கும் நோயாளியின் பாடோ பெரும்பாடு; கஷ்டமோ பெருங் கஷ்டம்! இருக்கும் பொருள்களை ஈடு வைத்தேனும் மருந்தை வாங்க வேண்டிய நிலை!

இந்தக் கஷ்டம் புரியாதவர்களாக மருந்துச்சாலைக்காரர்கள் அடிக்கடி செயற்கைத் தட்டுப்பாடுகளைத் தாமே உருவாக்கி மருந்து வகைகளை யானை விலை, குதிரை விலை என்று விற்கிறார்கள்.

அரசு விலையைக் குறைக்குமாறு பணித்தும், அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கு நிச்சயம் அவர்கள் ஒரு காரணம் காட்டுவார்கள்! ஏற்கனவே அதிக விலை கொடுத்து, அதிக வரி செலுத்தி, இறக்குமதி செய்த மருந்துகளைக் குறைந்த விலைக்கு புதிய கட்டுப்பாட்டு விலைக்கு விற்று அடையும் நஷ்டத்தை யார் பொறுப்பது?

வர்த்தகர்களே அப்படித்தான்! குறைந்த விலைக்கு வாங்கிய பொருள்களுக்கு விலை அதிகரிப்பு அல்லது வரி உயர்வு என்றதும் பேச்சு மூச்சில்லாமல் விலைகளை உயர்த்தி லாபம் தேடுவார்கள். விலைகளைக் குறைத்து விற்கச் சொன்னால் நஷ்டம் காட்டிச் சிணுங்குவார்கள்!! விட்டுக்கொடுக்காது முட்டி மோத முனைவார்கள்.

மருந்துகளைப் பொறுத்த மட்டில், மக்களுக்கு அவை குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்பதில் வேறு காரண காரியங்கள் தடையாக இருக்கமுடியாது. அரசும், விற்பனையாளர்களும் தமக்குள்ள லாப, நஷ்டப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளட்டும்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலைகளைக் குறைக்காவிட்டால், அரசாங்கம் மட்டுமே மருந்து வகைகளை இறக்குமதி செய்வதைவிட, அரசுக்கு வேறு வழி இருக்கமுடியாது. அதனையே சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் அறிவித்தும் இருக்கிறார். இறக்குமதி மருந்துகளின் விலைகளைக் குறைக்க ஒரு வார கால அவகாசம் கொடுத்திருக்கிறார். அது மக்கள் நலன் நாடிச் செய்யப்பட வேண்டிய ஒன்று.

ஆனல் அரசாங்கத்தின் மருந்து இறக்குமதி ஏகபோக உரிமை, ஊழலுக்கும், மோசடிக்கும் வழிசெய்து மருந்து வகைகள் கிடைக்காமற் போக அல்லது கள்ளச்சந்தைக்குப் போக இடமளிக்கக் கூடாது. அந்தப் பொறுப்பையும் அமைச்சர் சரிவரச் செய்தால் சரிதான்'

## கலைஞர் கொடும்பாவி எரிக்க முயன்ற 55 பேர் கைது

சென்னை, ஏப். 4
முதலமைச்சர் கருணாநிதியின் கொடும்பாவியை எரிக்க முயன்ற 55 பேரை சென்னைப் பொலீஸார் கைது செய்தனர்.

கொடும்பாவியுடன் எல்லிஸ் ரோடில் உள்ள அண்ணா சிலை நோக்கி சென்றுகொண்டிருந்த 47 பேர் இன்னொரு சம்பவத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் அ. தி. மு. க. முன்னாள் எம். எல். ஏவான திருமதி பி. வளர்மதி ஆவார். (எ)

நிர்ப்பந்தத்துக்கு பணிந்து

# பதவியில் இருந்து விலகமாட்டேன்; பங்களாதேஷ் அதிபர் அறிவிப்பு!

டாக்கா, ஏப். 3
பதவியில் இருந்து விலகப் போவது இல்லை என்று பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாத் தெரிவித்திருக்கிறார்.

59 வயதான ஜெனரல் எர்ஷாத் பங்களாதேஷின் நீண்டகாலத் தலைவர் ஆவார்.

அவரைப் பதவி விலகும்படி எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன.

1982ஆம் ஆண்டில் மார்ச் 24ஆம் திகதி இராணுவப் புரட்சி ஒன்றில் ஜெனரல் எர்ஷாத் ஆட்சியைக் கைப்பற்றினார்.

இதைக் கொண்டாடு முகமாக டாக்காவில் ஆளும் ஜாதியா கட்சியின் பொதுக் கூட்டம் நடந்தது.

சுமார் 30 ஆயிரம் பேர் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில் ஜெனரல் எர்ஷாத் பேசினார்.

எதிர்க்கட்சிகளின் நிர்ப்பந்தத்துக்கு நான் பணியப் போவதும்; பதவியைத் துறக்கப் போவதும் இல்லை.

பங்களாதேஷின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக எனது அரசு 8 அம்சத்திட்டம் ஒன்றை அமுல் நடத்தும்

இப்படி பங்களாதேஷ் அதிபர் சொன்னார். [எ]

## நைஜீரியாவிலும் தடை விதிப்பு

லாகோஸ், ஏப். 06
ருஷ்டியின் சாத்தானின் கவிதைகள் நூல் விற்பனைக்கு நைஜீரியாவும் தடை விதித்திருக்கிறது

ஆபிரிக்க நாடுகளில் நைஜீரியாவில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர்.

## ஜெயலலிதாவைக் கைது செய்ய மேல்நீதிமன்றத்தில் மனு

சென்னை, ஏப். 3
அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவை கைது செய்யுமாறு சென்னை நகர பொலிஸ் கமிஷனருக்கு உத்தரவிடும்படி கோரும் மனு ஒன்று சென்னை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

தேனியைச் சேர்ந்த அ.தி.மு.க. உறுப்பினர் திரு. எம். எஸ்.ஸ்ரீதரன் என்பவர் பொலீஸுக்குச் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இம் மனுவை திருவல்லிக்கேணி வாசியான திரு. ஐ. தீனன் தாக்கல் செய்தார்.

ஸ்ரீதரன் என்பவர் அ. தி. மு. க. வேட்பாளர் நியமனம் கேட்டு பணம் கொடுத்தவர். அப்பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டபோதே அவர் பயமுறுத்தப்பட்டார்.

ஸ்ரீதரனை பிழையான முறையில் தடுத்து வைத்தது. கொலை செய்ய முயற்சித்தது, பயமுறுத்தல் ஆகிய புகார்கள் சம்பந்தமாக செல்வி ஜெயலலிதா கைது செய்யப்படவேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

அரசியல் காரணங்களுக்காக பொலீஸார் ஜெயலலிதாவைக் கைது செய்யத் தவறிவிட்டனர் என்றும்மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ)

## இந்தியாவுடனை உறவு பற்றி நேபாள அரசின் நிலை

காட்மண்டு, ஏப்.3
இந்தியாவிடமிருந்து விசேட சலுகை எதையும் நாம் எதிர்பார்க்கவில்லை.

நேபாள்வெளியுறவு அமைச்சர் திரு. ஷைலேந்திராகுமார் உபாத்யாய முன்கண்டவாறு தெரிவித்தார்,

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உடன்பாடு கடந்த 23ஆம் திகதியுடன் காலாவதியாகியது.

சமத்துவமான அடிப்படையில் புதிய வர்த்தக உடன்பாடு ஒன்றை உருவாக்க நேபாளம் விரும்புகிறது. (எ)

## இந்திரா காந்தி கொலை:
## ஹேகர்சிங் மகன் வழக்கில் பிரதமர் ராஜீவ் பிரதிவாதி!

புதுடில்லி, ஏப். 03
இந்திரா காந்தி கொலை வழக்கில் தூக்கிலிடப்பட்ட எதிரிகளில் ஒருவரான ஹேகர்சிங்கின் மகன் ராஜேந்தர்சிங் மத்திய அரசின் மீது 10 லட்சம் ரூபா நட்டம் கேட்டு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

பிரதிவாதிகளாக பிரதமர் ராஜீவ் காந்தி, (இந்திரா கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக தக்கார் கமிஷன் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ள) ஆர். கே. தவான் ஆகியோர் மனுவில் காட்டப்பட்டு உள்ளனர்.

ஒரு நிரபராதியின் மகன் என்று பிரகடனப்படுத்துவதுடன் அப்பாவியைத் தூக்கிலிட்டதற்காக பத்து லட்சம் ரூபா நட்ட ஈடும் தரவேண்டும் என்று ராஜேந்தர்சிங் மனுவில் கேட்டுள்ளார்.

மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

தக்கார் கமிஷன் அறிக்கையில் இந்திரா காந்தி கொலையில் வேறு பலர் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. தக்கார் அறிக்கை வெளியிடப்படாமல் இருந்த சமயம் எனது தந்தை ஹேகர்சிங் விசாரணையின் பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

இன்று இந்திய ஜனநாயகத்துக்கு துக்கதினமாகும்.

நிரபராதிகள் தூக்கிலிடப்பட்டு வருகிறார்கள்; குற்றவாளிகள் அரசு உயர் மட்டங்களில் உலாவி வருகிறார்கள் —

இப்படி மனுவில் கூறப்பட்டுள்ளது. (எ)

# தி. மு. க. அரசைக் கவிழ்க்க அ.தி.மு. க.-காங்கிரஸ் சதி!
## கலைஞர் குற்றச்சாட்டு

அ. தி மு. க-இந்திரா காங்கிரஸ் கூட்டுப்பற்றி தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் மு. கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

'அடுத்த பொதுத்தேர்தலில் மத்திய அரசை அமைக்கப்போவது தேசிய முன்னணியே''— என்று திரு. கருணாநிதி அப்போது சொன்னார்.

முதலமைச்சரின் பேச்சு வருமாறு:

தி.மு.க. அரசை பதவி நீக்கம் செய்ய மத்திய அரசில் உள்ள சிலர் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

புதுடில்லிக்கு இரண்டு முறை நான் விஜயம் செய்தேன். அச் சமயங்களில் நான்கு தரம் பிரதமர் காந்தியைச் சந்தித்தேன். எனது அரசைப் பதவி நீக்கம் செய்வது பற்றிய அறிகுறிகள் பிரதமரிடம் தென்படவில்லை.

சட்டசபைக் கலவரத்தின் பின்னர் மத்திய அமைச்சர் தினேஷ்சிங் சென்னை வந்து வெளியிட்ட கருத்துக்கள் தி.மு.க அரசைப் பதவி நீக்கம் செய்யும் சதி முயற்சியை அம்பலப்படுத்தியுள்ளது.

கலவரத்தில் காயமடைந்து மருத்துவ மனையில் இருந்த தி.மு.க. அமைச்சரை தினேஷ்சிங் போய் பார்க்காததோ, ஜெயலலிதாவைப் போய்ப்பார்த்து மலர்ச் செண்டு வழங்கியதோ எனக்குக் கவலை தரவில்லை.

ஆனல் அரசியல் யாப்புக்கு இணங்க மாநில அரசு நடக்கத் தவறின் அந்த அரசு அகற்றப்படும் என்று கூறியது தான் கவலை தருகிறது.

50 ஆண்டுகள் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளேன். மக்கள் வேண்டாம் என்றால் நான் வீடு செல்லத்தயார். ஆனல் சதி முயற்சிகளினல் எனது ஆட்சியை சரணாகதி அடைய வைக்க முடியாது. அப்படி பதவி நீக்கம் செய்தால் மீண்டும் பெரும்பான்மைப் பலத்துடன் தி. மு. க. பதவிக்கு வரும்.

ராஜீவ் அரசு மத்தியில் தோற்றால்... தமிழ் நாட்டில் என்ன நடக்கும் என்பதை சிந்தித்து இந்திரா காங்கிரஸ் செயல்படவேண்டும்.

அடுத்த பொதுத்தேர்தலில் தேசிய முன்னணி தான் மத்திய அரசாங்கத்தை அமைக்கப் போகிறது.

ஆகவே அ. தி. மு. கவுடன் கூட்டுச் சேரும் இந்திரா காங்கிரஸுக்கு முன் கூட்டியே அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.தி.மு.க. தலைமையைச் சந்தித்துப் பேச, கதவடியில் காத்து நிற்கும் நிலை தான் இந்திரா காங்கிரஸுக்கு தமிழ் நாட்டில் ஏற்படப் போகிறது'—

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

# சென்.ஜோன்ஸ் - ஹாட்லி மாணவர்கள் முன்னணியில்

கொழும்பு, ஏப்ரல் 4
1988ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் நடந்த ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களில் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ரமணனுக்குக் கிடைத்த புள்ளிகள் 354.

கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் செல்வன் ஏ. கே. கே. எஸ். பெரேரா 381 புள்ளிகளைப்பெற்றார். இரண்டாவதாகவந்த பன்னிப்பிட்டியாவைச் சேர்ந்த செல்வன் ஏ. டி. யு. ஜெயவர்த்தன பெற்ற புள்ளிகள் 356

இம்மூவரும் பொறியியல் துறை மாணவர்கள்.

வர்த்தகத் துறையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவரில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் சி. நித்தியானந்தனும் ஒருவர்.

பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதிபெற்ற மாணவர்களுக்கு, அவர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகள் பற்றிய விவரங்களை பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் திரு. ஆர்தர் வேதமுல்ல தெரிவித்தார். [உ-எ]

## அனுமதிபெருத இறைச்சிக் கடைகள்

பருத்தித்துறை, ஏப்ரல்3
ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குள் அனுமதியற்ற இறைச்சிக் கடைகள் தொடர்ந்தும் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கடைகளை நடத்துபவர்களுக்கு இதுதொடர்பான எச்சரிக்கைக் கடிதங்களை பிரதேச சபையின் விசேட ஆணையாளர் அனுப்பி வைத்தும் இதுவரை அக்கடைகள் மூடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதுவித கட்டணமும் செலுத்தாத சட்ட விரோத இறைச்சிக் கடைகளால் பிரதேச சபையின் வருமானம் பாதிக்கப்படுகின்றது. (ச-16)

இறக்குமதி செய்யும்:

## ஆங்கில மருந்து வகைகளின் விலை குறைக்கப்பட வேண்டும்
### பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர்

கொழும்பு ஏப்ரல் 4
தனியார் துறையினர் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் ஆங்கில மருந்துகளின் விலைகளை ஒரு வார காலத்துக்குள் குறைக்க வேண்டும்.

அவர்கள் இதனைச் செய்யாத பட்சத்தில் இனிமேல் அரசாங்கம் மட்டுமே ஆங்கில மருந்துகளை இறக்குமதி செய்யும். கொழும்பு கிங்ஸ் வீதியிலுள்ள குடும்பசுகாதார பணிபணியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்பொழுது சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் முன் கண்ட கருத்தைத் தெரிவித்தார். (ச)

யாழ். பிரதம தபாலகத்தில்

## தொலைபேசி அழைப்புகளை மாலை6மணிவரை பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
யாழ். பிரதம தபாலகத்தில் தொலைபேசி அழைப்பு பெறுவதற்கான நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலகத்தில் இதுவரை தொலைபேசி அழைப்புகள் காலை 8.30மணி முதல் மாலை 4.30மணிவரை மட்டுமே வழங்கப்பட்டு வந்தன.

தற்போது காலை 7 மணி முதல்மாலை6மணிவரைதொலைபேசிவசதிசெய்யப்பட்டுள்ளது.

ஆயினும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2மணிவரை மட்டுமே தொலைபேசி அழைப்புக்களைப் பெறமுடியும். [illegible]

## உணவுப் பொருள் வழங்க அனுமதி

தாளையடி, ஏப்ரல் 04
பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு குறிப்பிட்டளவு உணவுப் பொருள்களை காங்கேசன்துறை களஞ்சியத்திலிருந்து வழங்க யாழ்ப்பாணம் உணவுத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

வடமாராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரீ. சந்திரகேசரத்தின் கோரிக்கையையடுத்தே அனுமதி வழங்கப்பட்டது.

# பத்திரிகையாளர்களுக்கு வருமான வரி விலக்கு
## தூதுக்குழுவிடம் அமைச்சர் உறுதி

கொழும்பு, ஏப்ரல் 4
பத்திரிகையாளர்களின் சம்பளத்துக்கு வருமான வரிவிலக்குப் பெற்றுத்தர முயற்சிப்பதாக கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் லொக்கு பண்டா தெரிவித்தார்.

தன்னைச் சந்தித்த இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தூதுக்குழுவிடம் இந்த உறுதிமொழியை அமைச்சர் அளித்தார்.

நிதி அமைச்சர் பதவியை வகிக்கும் பிரதமரைச் சந்தித்துப்பேசி இதற்கு உதவுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பத்திரிகைத்துறையின் பெருமையைக் காப்பாற்றவும் பத்திரிகையாளர் நல்வாழ்வுகுறித்தும் விசேட திட்டமொன்றை நான் ஆரம்பிக்க எண்ணியிருக்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு என ஒரு சாசனம் தயாரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன,

பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்குஎன்று விசேட பயிற்சித்துறை ஒன்றை ஆரம்பிப்பதற்கு சிபார்சு செய்வேன்.

இப்படி அமைச்சர் லொக்கு பண்டார சொன்னார்.

## உத்தரத்திருவிழா

மண்டைதீவு ஏப். 4
மண்டைதீவு வீரபத்திரர் ஆலயத்தில் இம்முறை பங்குனி உத்தரத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவையொட்டி ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. என். இராசலிங்கம் தலைமையில் இராமனா? இராவணனா? சிறந்தவன் என்ற தலைப்பில் பட்டி மன்றம் ஒன்றும் இடம் பெற்றது.

இப் பட்டி மன்றத்தில் பாடசாலை மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். (க-88)

## சிவயோகர் சுவாமி குருபூசை

சாவகச்சேரி ஏப். 4
சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிவயோகர் சுவாமிகளின் குருபூசை கொண்டாடப்பட்டது.

திவ்யஜீவன சங்கத் தலைவரும் ஆத்மஜோதி ஆசிரியருமான திரு. நா. முத்தையா தலைமையில் கூட்டு வழிபாடு திருமுறை ஓதல், நற்சிந்தனை முதலான நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. [ச- 31)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல்.4
ஏழாலை தம்புவத்தை ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 1 ஆம் திகதிசனிக்கிழமைஆரம்பமாகி 10 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

## அக்குபஞ்சர் பரீட்சை முடிவுகள்

மானிப்பாய், ஏப்ரல் 4
இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

செல்விகள்: அ. நா. நாகேஸ்வரி, ஆ. நகுலேஸ்வரி, பி. பவானி, ந. சந்திராதேவி, த. சுபாஜினி, க. ஈஸ்வரிமாலா, ப. லலிதாதேவி, சோ. ஜானகி, கி. பத்மலோஜினி, சி. பாமநளினி, செல்வன் வி, சுந்தரமூர்த்தி, செல்வன் க. ஜெயசங்கர்.

சித்தியடைந்தவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் 9ஆம்திகதி நடைபெறும் டாக்டர் சாமுவேல் ஹனிமன் ஞாபகார்த்த விழாவில் வழங்கப்படும். (ச-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வாடிக்கையாளர்களே**

எம்மிடம் சொற்ப கையிருப்பே உள்ள ஜோண்சன் (H P 10) வெளியிணை இயந்திரங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள முந்துங்கள்!

**விலை: 28,500/- ரூபா**

ரேலர்மடி நூல், போயா வலை நூல் என்பனவும் உண்டு

**சென். அன்ரனீஸ்**

40, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.



# உதயன்

04 - 04 - 1989 செவ்வாய்க்கிழமை



**ஜோண்சன் JOHNSON**

வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் ரேலர் மடிநூல் நீமில்லி மீற்றர், வலைநூல், போயா போன்ற கடற்றொழில் உபகரணங்களையும் மலிவு விலையில் வாங்க எம்மை நாடுங்கள்!

**சென். அன்ரனீஸ்**

63, யூதாததேயு வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்


## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பாம்புக்கடிக்கு மருந்தில்லை

யாழ்ப்பாணம், ஏப் 4

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பாம்புக்கடிக்கு உள்ளாவோருக்குஏற்றப்படும்மருந்து இல்லை என்று அறியவருகிறது.

இதனால் பாம்புக் கடிக்கு உட்பட்ட பலர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் கையிருப்பில் இருந்த மருந்து முடிவடைந்ததன் காரணமாகவே யாழ். ஆஸ்பத்திருக்கு அனுபப்பட்டு வருவதாகக்கிளிநொச்சி வைத்திய சாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)


உ

மல்லாகம்

**அருள்மிகு காளிகாதேவி ஆலய வருடாந்த சங்காபிஷேகத் திருவிழா**

**★ இன்று ★**

கருணை உள்ளம் கொண்டவளே – காளி
காட்சி தந்து ஆட்சி செய்வாய் எம்மை
கிருபை பெற பக்தர் தொழும் போது – அம்மா
கீர்த்தியினை நீ கொடுப்பாய் என்றும்
குருகுலத்தின் வேண்டுதலை – தாயே
கூடநின்றே தீர்த்து வைப்பாய் அன்றே
கெடுதலினைச் செய்வோரின் கூட்டம் –
தன்னை (மாதா)
கேலி செய்தே நீயறுப்பாய் உண்மை
கைத்தலமே சரணடைந்தோம் – தேவி
கொண்ட கொள்கையினை நிலைக்க வைப்பாய் நீயே
கோல மதில் எழில் நிறைந்தாய் – சக்தி
கௌரவத்தைக் காத்திடுவாய் நிசமே
இக்கணமே இங்குதிப்பாய் – மாரி
இன்பமதை மலரவைப்பாய் புவியில்!

**மேற்படி ஆலய சங்காபிஷேகம் பங்குனி மாதம் 22ஆம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை (4-4-89) நடைபெற உள்ளது.**

பிரசுரிப்பவர்: மு. அற்புததேவன்

எழுதியவர்; க. மனோகரன்

[சி-2067]



உங்கள் தேவை!

எங்கள் சேவை!!

● தரமான
● தெளிவான
● சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு - ரோணியோ வேலைகளுக்கு

★ ★ ★

**ஷப்ரு (சேவைப் பகுதி)**

இல: 19, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C/1946)



**Licensed Surveyors Association, Northern Division**

A General Meeting of the above Association will be held at the Centre for Better Society (No 115, 4th Cross Street, Jaffna commencing at 9 a.m.

A Draft Survey Act to replace the present Surveyors' Ordinance prepared by the Surveyor General for presentation in Parliament, contains several far reaching proposals to regulate the Survey Profession.

Members are kindly requested to be present to get acquainted with the provisions therein and to express their views.

C. Sandrasegara,
Hony. Secretary.

[60]


அ. தி. மு. க வினர் ரகளைக்கு ஆயத்தமானபோது

## சட்டசபையில் மீண்டும் சலசலப்பு

# கலைஞர் நிலைமையைத் தணித்தார்

சென்னை, ஏப்ரல் 4

**தமிழக சட்ட சபையில் நேற்று மீண்டும் ரகளை நிலை ஏற்பட்டது அதை அடுத்து சட்ட சபையில் மீண்டும் சலசலப்பு ஏற்படும் நிலையும் தோன்றியது. இதை அவதானித்த முதலமைச்சர் திரு கருணாநிதி அவரது கட்சியினரைத் தணியச் செய்தார்.**

சபை ஒத்திவைக்கப்படும் சமயம் அ. தி. மு. க. துணைத் தலைவர் எஸ் திருநாவுக்கரசு திடீரென எழுந்து, ஜெயலலிதா விவகாரம் தொடர்பாக தி. மு. க. அரசு பதவி விலக வேண்டும் என்று சேட்டுக்கொண்டார்.

சபாநாயகர் இடைமறித்து, உறுப்பினர் பேச முடியாது என்று தடுத்ததுடன், அவர் சொன்னதைச் சபைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிட்டார்.

இதன்பின்னரும் திருநாவுக்கரசு ஆசனத்தில் அமராமல் நின்றுகொண்டிருந்தார்.

அப்போது சபாநாயகர் ''உறுப்பினர் ஒன்றில் அமர வேண்டும்; அல்லது வெளியேற்றப்படுவார்'' –என்று எச்சரித்தார்.

அதன் பின்னர் அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.

தி.மு.க. உறுப்பினர் தரப்பில் சலசலப்பு ஏற்பட்டது. முதலமைச்சரின் கண்டிப்பான வேண்டுகோளைத் தொடர்ந்து அரசு தரப்பிலான சலசலப்பு அடங்கியது.

சபாநாயகரின் உத்தரவுப்படி, அ.தி.மு.க. எம். எல். ஏக்கள் 19 பேரை சபையில் இருந்து வெளியேற்றும் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னரும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளியே செல்லவில்லை. சபைக் காவலாளர்கள் உறுப்பினர்களை வெளியேற்ற அழைக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் தாங்களாகவே, கருணாநிதி பதவி விலகவேண்டும் என்று கோஷமிட்டபடி வெளியேறினர். (ஒ-எ)

## இலங்கைக்கு மேலும் 60 புதிய இஸுசு பஸ்கள்

### இந்திய அரசு வழங்கும்

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபைக்கு மேலும் 60 புதிய இஸுசு சொகுசு பஸ்களை இந்திய அரசு வழங்கவுள்ளது.

அடுத்த வாரம் அளவில் இவை கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்படும் என்று போக்குவரத்துச் சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய பஸ்கள் சால டிப்போக்களுக்கும் பகிர்ந்து வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு ஏற்கனவே இஸுசு பஸ்களை மத்திய போக்குவரத்துச் சபை வழங்கி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## இன்று தேர்

புங்குடுதீவு, ஏப். 4

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர் இன்று நடைபெறுகிறது. (இ-131)

## அரச அதிபர்கள் மாநாடு நாளை கொழும்பில்

அரியாலை, ஏப் 4

நாளைகொழும்பில்சகல அரச அதிபர்களுக்குமான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் புனரமைப்பு புனருத்தாரண நடவடிக்கைகள்பற்றி ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது.

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் வடக்கு-கிழக்கு அரச அதிபர்களின் மாநாடு ஒன்று திருகோணமலையில் நடைபெற்றது என்பது தெரிந்ததே. ஒ-13)

## விடுதலை

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வன் ரவி ஜெயவர்த்தனவைக் கொல்ல முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட பொறியியலாளர் டபிள்யு. எம். ஜயந்த வீரசேகராவும், டாக்டர் சுமதிபாலாவும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டனர். உ-எ)

### சமாதானத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச் )

டிக்கு சபாநாயகர் எம். எச். முஹம்மது தலைமை வகித்தார்.

இந்த அறிக்கையில் அரசின் சார்பில் பிரதமர் டி. பி. விஜேதுங்காவும், சுதந்திரக் கட்சியின் சார்பில் திருமதி பண்டாரநாயக்காவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. எஸ். தொண்டமானும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு. அ. அமிர்தலிங்கமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரபும் கையெழுத்திடுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. [அ-எ]

### ஞாயிற்றுக்கிழமை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பில் காயமுற்றவர்கள் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசரச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து புலோலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஹெலிக்கொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்.

மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமையன்று வல்வையில் பதற்றநிலை நிலவியது. (அ-160)

### வங்கிகள்.-.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன.

விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத் தடை காரணமாக யாழ் மாவட்டத்தில் செயலகம், வங்கிக் கிளைகள் மற்றும் அரச அலுவலகங்கள் கடந்த 22ஆம் திகதி முதல் செயல் இழந்திருப்பது தெரிந்ததே. ([illegible])

## புத்தூர் கொத்தணி போட்டி

அச்சுவேலி ஏப்ரல் 4

புத்தூர் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையேயான வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்றும் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. என். கணேசபிள்ளை தலைமையில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும். (இ-11)

### ஹர்த்தாலுக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகவும் பாதுகாப்புப் படையினருக்கு- இந்தத் தடைகளை நீக்கவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளதாம்.

சில வீதித் தடைகளில் பொறி வெடிகளையும் தீவிரவாதிகள் இணைத்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக பாதுகாப்புப் படையினரும் இந்தத் தடைகளை அகற்றத் தயக்கம் காட்டி வருகின்றனராம்.

மேலும் சில கடைகள், மற்றும் அரச நிறுவனங்களுக்கும் ஹர்த்தாலை அனுசரிக்கும்படி எச்சரிக்கப்பட்டுள்ளதாம்.

மீறுவோருக்கு ரீ-56 பதில் சொல்லும் எனவும் அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளதாம். ([illegible])

### ஸ்ரீலங்கா சிப்பாய். .

புர. இரத்தினபுரி ஆகியஇடங்களில் கடந்த ஞாயிறு ஜே. வி. பி. இயக்கத்தினர் தமக்கு எதிரான இயக்கங்களைச் சேர்ந்த நால்வரைக் கொன்றனர்

அனுராதபுரம் மாவட்டத்தில் சனிக்கிழமை பிற்பகல் ஜே.வி.பி. இயக்க ஆதரவாளர் என்று சந்தேகிக்கப்படும் இருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர். [ஒ-எ]

### முல்லைத்தீவு----

ஞல் பாதிக்கப்பட்ட அளம்பில், குமுழமுனைப் பகுதிகளில் இருந்து வெளியேறி அகதிகளாக அடைக்கலம் புகுந்திருப்பவர்களே அனேகமாக இந்நோயினால் பீடிக்கப்பட்டு உள்ளனர். (ஒ-10)

### யாழ்ப்பாண-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல அமைதிப்படை முகாம்களுக்குச்சென்று பாதுகாப்பு நிலைமை குறித்து அதிகாரிகளிடமிருந்து கேட்டு அறிந்து கொண்டார்.

அவர் உயர் அதிகாரிகளுடன் மாநாடு ஒன்றை நடத்தியதாகவும் அறிய வருகிறது.

இதேவேளை இந்திய ராணுவத்தின் தென் மண்டலப் பிரதம தளபதி ஜெனரல் சட்டர்ஜி நேற்று கொழும்பில் ஜனாதிபதிஆர்.பிரேமதாசவை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர், [அ-9]

### இடமாற்ற---:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இடமாற்றக் கடிதங்களைப் பெற்றுச் செல்லலாம் என்று யாழ். கல்வித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி தெரிவித்தார்.

இவர்களுக்கான இடமாற்றங்கள் கடந்த முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்துள்ளன.

இடமாற்றம் பெற்றவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் பணிபுரிந்தவர்கள் ஆவர். (ஒ-10)

## காட்டிக் கொடுப்போருக்கு தெற்கில் சன்மானம்!

கொழும்பு, ஏப் 4

தென்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள், வெடிமருந்துகள் பற்றிய தகவல்களைக் கொடுப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது.

இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவத் தலைமைக்காரியாலயம் ஆகியவற்றுடன் எழுத்து மூலம் அல்லது தொலைபேசி மூலம் தகவல்களை, எவரும் தங்கள் அடையாளத்தைக் காட்டாமல் தெரிவிக்கலாம்.

நேர்முகமாகவும் இந்த இடங்களுக்குச் சென்று தகவல்களை வழங்கலாம் என அரசு அறிவித்து உள்ளது. (ஒ-எ)

## இன்று மருதடியில் கைலாச வாகனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை விநாயகப் பெருமான் அழகிய கைலாச வாகனத்தில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். ஒ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா தம்பாபிள்ளை

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை சின்னம்மா தம்பாபிள்ளை சிவபதமடைந்துவிட்டார். இவர் காலம்சென்ற பண்டிதர் தம்பாபிள்ளையின் அன்பு மனைவியும் காலம்சென்ற பொன்னம்மா நாகலிங்கம், கந்தையா ஆகியோரின் அன்புச்சகோதரியும் நேசமலர் (இளைப்பாறிய ஆசிரியை) பவளரத்தினம் (ஆசிரியை), குணசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), சொர்ணமலர் (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணன், (J. P. U. M) வ. நாகேஸ்வரன் (Chief Clerk Forest Dpartment, Vavuniya) சுபத்திராதேவி மா. கணபதிப்பிள்ளை (உதவிப் பொறியியலாளர் அம்பாறை) ஆகியோரின் அருமை மாமியாரும் மயூரன், ஈஸ்வரன் வாசுகன், குமரேசன், விசாகன், நிர்மலன், நந்தகுமார், ரவீந்திரன், ஐங்கரன், தபேசன், கல்பனா, கீதாஞ்சலி, சத்தியா, வதனி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-04-89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து சாவகச்சேரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
த. குணசிங்கம்.
(மகன்)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(10265)

### இராமலிங்கம் சுப்பிரமணியம்

புங்குடுதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் 03-04-1989 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் சீதைப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும், அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், சாரதாம்பாள், சற்குணராசா (சுவிஸ்), சரோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தாமசிப்பிள்ளை, செல்லம்மா, பார்வதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிங்கம் அவர்களது அன்பு மாமனும், பொன்னையா, காலஞ்சென்ற கந்தையா, சுப்பிரமணியம், கார்த்திகேசு (கனடா), காலஞ்சென்ற செல்லத்துரை, நடராஜா (அதிபர், புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயம்), தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீபன், சரன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 04-04-1989 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. E. S. உதயகுமார்

புங்குடுதீவு - 6 [77]

### அல்விறெட் மரியநாயகம்

சில்லாலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஊழியர் கொழும்பு துறைமுக அதிகாரசபை - அல்விறெட் மரியநாயகம் காலமானார். இவர் மேரி பெர்னதேத்தின் அன்புக் கணவரும், லின்ரா, கலிஸ்ற்ரா, லின்ரன், (பிரான்ஸ்), டொறிங்ரன், வீற்ரு ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரான்சிஸ் மேரியோசவ் (சவுதி அரேபியா) அன்பு மாமனும், லக்சிகாவின் அன்புப் பேரனும், திரு. யோசவ் (இளைப்பாறிய ஊழியர் தபால் தந்தி இலாகா) அருமைச் சகோதரரும், அகத்தம்மாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 4-4-89 செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 3.30 மணிக்கு சில்லாலை சென் மேரிஸ் சேமக்காலையில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டொறிங்ரன்

(70)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] இல் உள்ள அச்சகத்தில் 04 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org